விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka


# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 30 வியாழக்கிழமை (13.06.2002) தொலைபேசி 3378 ஒலி 176

திருமணப் பட்டுப்
புடைவைகளின் கைராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469





நேற்றைய பூரண ஹர்த்தாலால் யாழ்ப்பாண நகரமையம், நெல்லியடி நகரப்பகுதி சன நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடப்பதைப் படங்களில் காணலாம்.

# நேற்றுப் பூரண ஹர்த்தால்
# குடாநாடு வெறிச்சோடியது!

## படையினரின் வாகனங்கள் செல்லத்தடை

(யாழ்ப்பாணம்)

**இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அரசு காட்டிவரும் அசமந்தப் போக்கை கண்டித்தும், உடன்படிக்கையைத் திருப்திகரமான முறையில் நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும் நேற்று நடைபெற்ற குடாநாடு தழுவிய ஹர்த்தால் பூரண வெற்றியளித்துள்ளதுடன் குடாநாடு பூரணமாக ஸ்தம்பிதம் அடைந்தது.**

யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அழைப்பை ஏற்று நேற்று இடம்பெற்ற ஹர்த்தாலினால் தீவுப்பகுதி உள்ளிட்ட யாழ் குடாநாட்டில் உள்ள பிரதேச செயலகங்கள் பிரதேச சபைகள் வங்கிகள், நீதிமன்றங்கள் மற்றும் அரச திணைக்களங்கள், தனியார், கூட்டுறவு, கூட்டுஸ்தானங்கள் அனைத்தும் இயங்கவில்லை என்று எமது

உள்ள பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளும் இடம் பெறவில்லையாதலால் காங்கேசன் துறை வீதி, மானிப்பாய் வீதி, பலாலி வீதி, பருத் தித்துறை வீதி மற்றும் சிறிய வீதிகளும் மக்கள் போக்குவரத்தின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார் மடம், சங்கானை, பண்டைத்தரிப்பு, நெல்லியடி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய இடங்களில் உள்ள சந்தைகள் எதுவும் வியாபாரத்திற்காக கூடவில்லை. சந்தைக் கட்டடங்கள் யாவும் வெறிச்சோடிக்காணப்பட்டதாக எமது பிரதேச செய்

## இந்தியா சென்ற பிரதமர் ரணில் நாடு திரும்பினார்

(கொழும்பு)

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாடு திரும்பியுள்ளார்.

இந்தியா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியப்

(02ம் பக்கம் பார்க்க)

## யாழ் செயலகம் வழமைபோல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

மீனவர்களின் மறியற் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டதை அடுத்து இன்று யாழ் செயலகம் மற்றும் யாழ் பிரதேச செயலகம் ஆகியன வழமைபோல் இயங்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கலை விஞ்ஞான பீடங்கள் வழமைபோல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் கலை, விஞ்ஞான, வர்த்தக முகாமைத்துவ பீடங்கள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையே கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதல்ச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை யாழ் பல்கலைக் கழக விவசாய பீடத் தலைவர்

(10ம் பக்கம் பார்க்க)

## தேசியப் பட்டியல் எம்.பியாக முத்துலிங்கம் நியமனம்!

ஆனந்த சங்கரி அறிவிப்பு

யார், கூட்டுறவு, கூட்டுஸ்தானங்கள் அனைத்தும்இயங்கவில்லை என்று எமது பிரதேச செய்தியாளர் அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் சகல பாகங்களிலும் சிறிய வீதிகளும் மக்கள் போக்குவரத்தின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலும் உள்ள பெரிய, சிறிய டங்கள் யாவும் வெறிச்சோடிக்காணப்பட்டதாக எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

(2ம் பக்கம் பார்க்க)

# யாழ். மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு அமைச்சு அவசர அழைப்பு

## மறியல் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகம் முன்பு கடந்த நான்கு தினங்களாக மறியல் போராட்டம் நடத்தி வந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தைக்கு உடனடியாக கொழும்புக்கு வருமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ விடுத்த அழைப்பை அடுத்து நேற்றுடன் மறியற் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித் தடை நீக்கம், கரையோரப் பிரதேசங்களில் மீனவரின் இடங்களில் இருந்து இராணுவம் வெளியேறுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 6ந் திகதி முதல் யாழ் செயலகம் மற்றும் யாழ் பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன் மீனவர்கள் மறியற் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

மறியற் போரட்டம் ஆரம்பமானதை அடுத்து யாழ் செயலகப் பணிக்ள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தனா

(02ம் பக்கம் பார்க்க)

# மீன்பிடித் தடையை தளர்த்த இணக்கம்

## படைத்தரப்பு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட கடல் பிரதேசத்தில் மீனப்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள சில கட்டுப்பாடுகளைத் தளர்த்த யாழ் பாதுகாப்புத் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பலாலிப் படைத்தள ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டு மீனவர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் குருநகர் இறங்குதுறையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ் பாதுகாப்புத் தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, வடபிராந்திய கடற்படைக் கட்டளை அதிகாரி ரியல்

(2ம் பக்கம் பார்க்க)

## ஆனந்த சங்கரி அறிவிப்பு

(கொழும்பு)

மறைந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரத்தின் எம்.பிப் பதவிக்கு முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவர் எஸ். முத்துலிங்கம் நியமனம் பெறவுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபு தலைவர் வி. ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக நியமனம் பெறவுள்ள எஸ். முத்துலிங்கம் 2001ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## அன்பு வாசகர்களே:-

**யாழ் பல்கலைக்கழக மாணவர்களிடையே ஓர் சுமூக நிலை ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு விதுரன் எழுதிய “யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மோதல்” ஓர் அலசல் பிரசுரிக்கப்படவில்லை இதனை ஆவலோடு எதிர்பார்த்திருந்த எங்கள் அன்பு நிறைந்த வாசகர்க்ளிடமும் அலசலை எழுதிய விதுரனிடமும் மன்னிப்புக் கோருகின்றோம்.**

**ஆசிரியர்**

# சமூக சீரழிவில் ஈடுபட்டால் பகிரங்கத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

சமூகச் சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இளைஞர் கோஷ்டிகள் மீது மிக விரைவில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி எச்சரித்துள்ளார்.

அரசியல் துறை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தார்.

நேற்று முன்தினம் சித்தன்கேணிப் பகுதியில் இடம்பெற்ற இளைஞர் கோஷ்டி மோதலில் அப்பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை

வெல்டிங் கம்மாலைவேலைகள் தெரிந்தவர்கள் உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி M T K. வேக்சொப், 40 றக்காறோட், யாழ்ப்பாணம் (I.C.R.Cக்கு முன்பாக) (5429)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர் சங்கஅங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் 14ம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளதால் அங்கத்தவர்களை சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(ம)

## இராசி பலன்

13-06-2002

(வைகாசி 30 வியாழன்)

திருதியை பி.இ 3.19 வரை
புனர்பூசம் ந.இ 12.55 வரை
இராகு காலம் 1.22-2.52
நல்லநேரம் 7.22–8.52

**மேடம்**

காரியத்தடங்கல், பெரியோர் சந்திப்பு, பணவிரயம் விடாமுயற்சி.

**இடபம்**

சுகக் குறைவு, வீண் அலைச்சல், சந்தோசமான நிகழ்வு.

**மிதுனம்**

புதிய தொழில் முயற்சி, பிரயாணம், உறவினர் சந்திப்பு, பணவரவு.

**கடகம்**

உறவினர் சந்திப்பு, மாதர் நட்பு, சென்ற இடத்தில் சிறப்பு, மனக்கிலேசம்.

**சிங்கம்**

நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி உற்சாகம், தனலாபம்.

**கன்னி**

தட்டுப்பாடு, வீண்விவகம், எடுத்தகாரியம் நிறைவேறும், சயன சுகம்.

**துலாம்**

காரிய தாமதம், போசன சுகம், இலட்சுமிகரம், அபூர்வ சந்திப்பு.

**விருச்சிகம**

காரியஅனுகூலம், அன்னியர் உதவி, கூட்டு முயற்சி' பிரயாணம்.

**தனுசு**

தூர பயணம், சத்துரு ஜெயம், மனக் கட்டுப்பாடு, கற்பனைமிகுதி.

**மகரம்**

நினைத்த காரியம் கைகூடும், விரும்பாத உறவு, வீண்பிரச்சினை.

**கும்பம்**

மாதர் சிந்தனை, புதிய பொருள் வருகை, முயற்சி பலிதம், உடல் வியாதி.

**மீனம்**

உணர்ச்சி வசப்படல், செல்வாக்கு குறைவு, நித்திரைக்குழப்பம், போசன சுகம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### இந்தியா

பிரதமர் வாஜ்பாய், எதிர்க்கட்சிதலைவி சோனியாகாந்தி இந்திய வெளிவிவகாரஅமைச்சர் ஜஸ்வந்சிங், தமிழக முதல்வர் செல்விஜெயலலிதா ஆகியோரைச் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

(வ)

# போரினால் பாதிப்படைந்த வட-கிழக்கிற்கு உலக சுகாதார ஸ்தாபனம் மருத்துவ உபகரணங்களைவழங்கும்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள உலக சுகாதார ஸ்தாபனம் வடகிழக்கிற்கும் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் உடனடியாக மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கு முடிவுசெய்துள்ளது உலக சுகாதார ஸ்தாபனத்தின் (டபிள்யூ.எச்.ஓ) கொழும்பு அலுவலகம் வடக்கு கிழக்குபகுதிகளில் சுகாதார நிவரங்கள் என்னும் தலைப்பில் வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கான மருத்துவ உதவிகள் வழங்கும் திட்டத்தின் 3ம் மாத முடிவில் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினுள் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஸ்தாபித்தல், வெற்றிடமாக உள்ள சுகாதார ஆலோசகர்களுக்கு நியமனம் வழங்கல் வெற்றிடமாகவுள்ள தொற்றுநோய் மருத்துவ நிபுணர்களுக்கு நியமனம் வழங்கல் என்பன அடங்கும்.

இத் திட்டம் அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களை உள்ளடக்கியது. இவற்றைவிட மேற்கூறிய சேவைகள் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் ஒழுங்கான சேவைகள் நடைபெறுவதை உறுதிசெய்தல், மருத்துவப்பொருட்கள், அத்தியாவசியமானமருத்துவ உபகரணங்கள் பெறப்படுவதை உறுதிசெய்தல், மருத்துவ துணைச்சேவைகளை வழங்குதல் என்பனவும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

இவ்வறிக்கையில் மேலும் இப்பிரதேசங்களில் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுகிறது என்றும் மருத்துவ வசதிகள் அமைப்புக்களுக்கு பெருமளவு அழிவு நிகழ்ந்துள்ளது என்றும் மூன்றாம் நிலை மருத்துவ வசதிகள் இல்லாதிருப்பதாகவும் பெருமளவு சுகாதார நிலையங்கள் அழிவுற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (த)

## உணவு முத்திரைகளை இன்று பெறுக

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுகான உலர் உணவு நிவாரண முத்திரை வழங்கும் இறுதித்தினம் இன்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு முத்திரைகளைப் பெறாதவர்கள் அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை என்பவற்றுடன் வருகை தந்து இன்றைய தினமே முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-19)

## மானிட

களுக்கான சம்பளம் மாதந்தோறும் கிடைப்பதில்லை. வருட முடிவில் பன்னிரு பத்திரங்களில் சம்பளம் பெற்றுக்கொண்டேனெனக் கையொப்டமிட்டு அரசாங்கத்துக்கு அனுப்பி, அவை அங்கீகரிக்கப்பட்டு வந்தபின்னரே சம்பளம் வழங்கப்படும். 1930ஆம்ஆண்டுக்குரிய சம்பளத்தை வழங்குவதற்கான படிவங்களை 1931 ஆம் ஆண்டுகைலாசபதி ஐயாவிடம் கொடுத்தபோது அவர் கையொப்பமிடமறுத்துவிட்டதுடன், 'இந்தக் கருவிகரணங்களைப் பிழையாக பயன்படுத்தக்கூடாது' என்றும் கூறிவிட்டார். 'இந்து போட்' இராசரத்தினம் அவர்கள் அவரிடம் 'முழுச்சம்பளத்தையும் தந்தால் தான் கையொப்பமிடுவீர்களோ?' எனக் கேட்டதற்கு, 'இன்றைய திகதி போட்டுக் கையொப்பமிடுவேன்' என்றுகைலாசபதியவர்கள் பதில் தந்தார். இதனால் சைவாபிவிருத்திச் சங்கச் சிறாப்பர் ஒருவர் கைலாசபதி ஐயாவிடம் மாத்திரம் மாதந்தோறும்பணங்கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெறும் நிலை ஏற்பட்டது.

இப்படி எத்தனையோ நினைவுகள் மௌனமுனிவர் பொ.கைலாசபதி பற்றி, அவரது மாணவனாகிய என்னுள் எழுகின்றன. அவரதுமாணாக்கரை மாத்திரமன்றி இவ்வுலக மாந்தரனைவருக்கும் வழிகாட்டப் போதுமானது அவரது சிந்தனைகள் என்பதில் ஐயமில்லை.

## 19,20ஆம் திகதிகளில் யாழ் செயலகத்தில் மோட்டார் வாகன பதிவு நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை மோட்டார் வாகன பதிவு திணைக்களத்தின் நடமாடும் சேவையொன்று இம்மாதம் 19ம், 20ம் திகதிகளில்யாழ்ப்பாணம்செயலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் செயலக மோட்டார் வாகன பதிவுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகனப்பதிவு திணைக்களத்தின் இந்த நடமாடும் சேவையில்மோட்டார் வாகனப்பதிவு ஆணையாளர் நாயகம் கே.ஜினதாஸ, உதவி ஆணையாளர்கொடித்துவக்கு தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று கலந்து கொள்ளவுள்ளது,

இந்த நடமாடும் சேவையின்போது மோட்டார் வாகன சாரதிகளுக்கான லைசன்ஸ் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## சர்வதேச மன்னிப்புசபை விடுதலைப்புலிகள்சந்திப்பு !

(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச்சபை முதன்முதலாக தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர்களை விரைவில்சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகளைக்கண்காணிக்கும் இந்தநிறுவனத்தைச் சேர்ந்த தூதுக்குழு ஒன்றே தமிழீழவிடுதலைப் புலிகளுடன் முதற்தடவை பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதிர்வரும் 15ம் திகதிசனிக்கிழமை கொழும்பு வரவுள்ளது.

(வ)

### யாழ் மீனவர்

தலையிட்டு பாதுகாப்அமைச்சின் செயலருடன் அவசர பேச்சுவார்த்தைக்கு ஒழுங்கு செய்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அழைப்பை ஏற்று யாழ்மீனவசங்கத்தலைவர்சி. தவரத்தினம். வடமராட்சி மீனவசங்கத் தலைவர் கே.சூரியகுமார், கடற்றொழிலாளர்சங்க பொது முகாமையாளர் ஆர். இராஜாராம் ஆகியோர் இன்று காலை விமானமூலம் கொழும்பு பயணமாகின்றனர்

கொழும்பு செல்லும்மீனவ சங்க பிரதிநிதிகளுடன் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனும் கொழும்பு செல்கிறார்

(ம)

### மருதங்கேணியில் கலந்துரையாடல்

(திருநெல்வேலி)

விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினருக்கும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மருதங்கேணியிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பணிமனையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில்வடமராட்சி கிழக்குப்பகுதிமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாகவும் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

கடற்புலிகளின் தளபதி மங்களேஷ், வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தீபன் உட்படவிடுதலைப் புலிகளின் அரசியல்துறை உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

(த-43)

### மீன்பிடித்

அட்மிடல் சரத்ரவீசேகர 51வது படைப்பிரிவுப்பிரிகேடியர் ரஞ்சித்சில்வா மற்றும் குருநகர், கொட்டடி, நாவாந்துறை, பாசையூர் மீனவசமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களின் கட்டுப்பாடுகளை தளர்த்த யாழ் பாதுகாப்பு தலைமைக்கட்டளை அதிகாரி இணக்கம் தெரிவித்துள்ளார் அதன் விபரம் வருமாறு,

- யாழ் குடாக்கடலில்இரவு பகல் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படும். ஆனால் மீனவர்கள் கடலில் இருந்து பகல் நேரத்திலேயே இறங்குதுறை ஊடாக வெளியேறவேண்டும்
- பண்ணைக் கடற்கரை வீதியில் அமைந்துள்ள சகல தடைகளும் மீனவர்களின் போக்குவரத்து வசதிக்காக நீக்கப்படும்
- வலிகாமம் மேற்குமற்றும் தென்மேற்கு மீனவர்கள் பண்ணைக்கடல் வழியாக சென்றுவர அனுமதித்தல்.
- பொதுமக்கள்ரெலிக்கொம் நிறுவனம் அமைந்துள்ள மேற்குப்பகுதியில் காரைதீவு வீதியில் இருந்து நூறுமீற்றர் தூரத்திற்கு அப்பால் மீளக் குடியமர அனுமதிக்கப்படுவர்.
- குருநகர் கொழும்புத் துறை கடற்கரை வீதி தொடர்ந்தும் மூடப்பட்டே இருக்கும். நிலைமை சீரானதும் பாதை திறப்பது பற்றி மீளாய்வு செய்யப்படும்:
- கொட்டடிப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பிக்கப்படும்.
- வன்னியில் இருந்து யாழ் வந்து மீளக்குடியமர்ந்த மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.
- மீனவர்களின் சைக்கிள்களைபாசையூர் வியாபார நிலையத்திற்கு அருகில் நிறுத்த அனுமதித்தல்.
- சீ-நோர் இறங்குதுறைப் பகுதிக்குள் படகுகளுடன் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. காலக்கிரமத்தில் நிலைமை சீரானதும் இறங்குதுறைப் பகுதிக்குச் செல்வது குறித்துப் பரிசீலிக்கப்படும்.
- மீனவர்கள் கண்ணாடி இழைப்படகுகளையும், 15 குதிரைவலு இயந்திரங்களையும் தொழிலில் பயன்படுத்த அனுமதித்தல்.

(இ)

### முஸ்லிம் பள்ளிவாசல் சம்மேளனம் அங்குரார்ப்பணம்

(திருநெல்வேலி)

குடாநாட்டு முஸ்லிம் மக்களின் நலன்கருதி 'முஸ்லிம் பள்ளிவாசல் சம்மேளனம்' என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பினைதெரிவு செய்யும் நிகழ்வில்விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டார்

(த 34)

### வருடாந்த உற்சவம்

(கரவெட்டி)

கரவை தச்சந் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

இவ்வாலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் எதிர்வரும் 22, 23, ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

(த-8)

### நீர்த்தேக்கத்தினால் அசௌகரியம்

(நெல்லியடி)

நெல்லியடி பஸ் தரிப்பு நிலையத்திற்குப் பின்புறமாக உருவாகியுள்ள நீர்த்தேக்கம் காரணமாக பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மேலும் அதிகளவான நீர் தேங்கியுள்ளது.

(த-247)

### நேற்று.

நேற்றைய ஹர்த்தாலை அடுத்து குடாநாட்டு மக்கள் பெரும்பாலானோர் தமது வீடுகளில் இருந்தவாறே ஹர்த்தாலை அனுஷ்டித்தனர்.

**பலாலி வீதியில் தடை**

நேற்றைய ஹர்த்தாலின் போது பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தியால் இராணுவ வாகனங்களைச் செல்ல விடாது மாணவர்கள் வீதித் தடை போட்டிருந்தனர்.

இதனால் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வீதியால் இராணுவ வாகனங்கள் செல்ல முடியாதிருந்தது. பிற்பகல் ஒருமணிக்குப் பின்னர் இராணுவ வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

**யாழ்நகரம் வெறிச்சோடியது**

ஹர்த்தாலை அடுத்து யாழ். நகரப்பகுதி, சந்தைப் பகுதி, வர்த்தகநிலையங்கள் மத்திய பேருந்து தொலைத்தொடர்பு நிலையங்கள் ஆகியனமக்கள் நடமாட்டம் இன்றி காணப்பட்டது

இதேவேளை யாழ்நகரப் பகுதிகளில் பொலிசாரின் நடமாட்டமும் இராணுவவாகனங்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்பட்டன.

**தீவகத்தில் பூரண ஹர்த்தால்**

நேற்றையஹர்த்தாலால் தீவுப்பகுதியில் உள்ளஅரச திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள்வர்த்தகநிலையங்கள் கூட்டுறவுச்சங்கங்கள் எதுவும் இயங்கவில்லை தீவுப் பகுதியில் பெரும்பாலும் மக்கள்நடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

(வ-6,10,19,41,75)

# அரசாங்கமும் எதிர்க் கட்சியினரும் ஒன்றிணையும்காலம் நெருங்கிவிட்டது

## அமைச்சர் கரு ஜெயசூரிய

(கொழும்பு)

நாட்டின் மேம்பாட்டினைக் கருத்தில் சொண்டு அரசாங்கமும், எதிர்கட்சிகளும் இணைந்து செயற்படும் காலம் நெருங்கியுள்ளதாக மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டுமண்டபத்தில்நேற்று முன்தினம் பலாக்கன்றுகள் நாட்டும் திட்டத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறுதெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் அமைச்சர் கருஜெயசூரியாவுடன், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜ பக்ஷவும் கலந்து கொண்டதை முன்னிட்டே அவர்மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஆளும்கட்சிஉறுப்பினர்களும் எதிர்கட்சியினரும் இவ்வாறு ஒருபொது வைபவத்தில்கலந்து கொண்டமையானது நாட்டின் எதிர்கால சுபீட்சத்துக்கு வழி வகுத்துள்ளது என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர். (த-8)

## பிரித்தானியக் கவுன்சில் புத்தகங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

பிராந்திய ஆங்கில ஆதார நிலையத்திற்கு பிரித்தானியக் கவுன்சில் அன்பளிப்பாக வழங்கிய ஆங்கிலப்புத்தகங்கள் மற்றும் கணனி என்பனவற்றை யாழ் வலயக்கல்விப் பணிமனை அண்மையில் கையேற்றது.

மேற்படி பொருட்கள் யாழ் குடாவில் மாணவர்களின்ஆங்கில அறிவுவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்டன. (உ-19)

## காணாமல்போனோர் சங்க பெண் உறுப்பினர்கள் தென்பகுதி செல்வர்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் ஜயலத்ஜெயவர்த்தனாவின் ஏற்பாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனோர் சங்கத்தைச் சேர்ந்த 300 பெண்களைக் கொண்டகுழு ஒன்று தென்பகுதிக்குச்செல்லவுள்ளது.

எதிர்வரும் 18ம்திசதிதரை வழிப்பாதையூடாக தென்பகுதிக்குச் செல்லவுள்ளஅவர்கள் தமது நிலைப்பாட்டை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேரில்சென்று விளக்கவுள்ளனர்.

இதேவேளை இக்குழுவில் இடம்பெறவிரும்பும் கைதாகி காணாமல் போனோர் சங்க பெண் உறுப்பினர்களை இல.963,கே.கே.எஸ். வீதியில் அமைந்துள் ளசங்கத்தின் பொருளாளரின் வீட்டில் பதிவினை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## மோட்டார் சைக்கிள்கள் வீதி ஓரத்தில் விற்பனை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பிரதான சந்தை வீதி ஓரத்தில்நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிள்கள் விற்பனை செய்யப்பட்டன.

கொழும்பில் பாவிக்கப்பட்டு பின் மறுசீரமைக்கப்பட்ட மேற் மற்றும் எம்ரி-90 ரக மோட்டார் சைக்கிள்களே 50 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் ரூபாவரையில் விற்கப்பட்டன.

பெரும் தொகையான மக்கள் கூடி பேரம் பேசி மோட்டார் சைக்கிள்களை வாங்கியமையைக் காண முடிந்தது. (உ-2)

## தனியார் சிற்றூர்திச் சங்க அங்கத்தவர்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ) யாழ். அலுவலக எற்பாட்டில் தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்க அங்கத்தவர்களுடனான ஓர் கலந்துரையாடல் இல. 146, கோவில் வீதியில் அமைந்துள்ள மேற்படி அலுவலக மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மு. ப. 10 மணிக்குநடைபெறவுள்ளது.

- சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ) ஆகிய, எமது வெளியீடான 'சிறுவர் பாடல்கள்' என்கின்ற ஒலிப்பதிவு நாடாவினது இலவச விநியோகமும் பயன்பாடும்.
- அங்கவீனமடைந்த நிலையில் பாடசாலைக் கல்வியினைத் தொடரும் மாணவச் சிறார்களுக்கான போக்குவரத்துச் சேவை ஆகிய விடயங்கள் தொடர்பாக முக்கியமாகக் கலந்துரையாடப்படவுள்ளன.

இவை தவிர ஏனைய பொருத்தப்பாடான விடயங்களினைக் கலந்துரையாடி முடிவுகளினை அன்றைய தினமே எடுக்கவுள்ளதனால் ஒவ்வோர் தனியார் சிற்றூர்திச் சங்கத்தின் சார்பிலும் தலைவர், செயலாளர் உட்பட மூவரினை மேற்படி தினத்தில் சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## படையினர் பனைமரம் தறிப்பு

(மந்திகை)

பருத்தித்துறை கற்கோவளப்பகுதி குடிமனைப் பகுதிகளிலுள்ள பெருமளவிலான பனைகள் தறிக்கப்பட்டு படையினரால் காப்பரண்கள் அமைக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் முதல் கற்கோவளம் பகுதியில் படையினரால் 50 க்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளதாகவும் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-23,245)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

2001 ஆம் கல்வியாண்டில் முறைசாராக் கல்விப்பிரிவில் கணனிக்கற்கைநெறியைமேற்கொண்டவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9. 00 மணி தொடக்கம் பி.ப.1.00 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இதேவேளை, மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (உ-19)

## கல்விக்கண்காட்சியும் சாகஸநிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்தேசியகல்வியியற்கல்லூரியின் இரண்டாம் வருடநிறைவை முன்னிட்டு மாபெரும் கல்வியியற் கண்காட்சியும், சாகஸ நிகழ்வும் எதிர் வரும் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை தினமும் காலை 8. 30 மணி தொடக்கம் மாலை4.30மணி வரை கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-8)

## பொதுவேலை நிறுத்தத்துக்கு முடிவுகட்ட விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு இந்தியாவில் இருந்து ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

தனியார் பஸ்வண்டி உரிமையாளர்கள் சிலர் நேற்றுமுன் தினம்மேற்கொண்ட பொது வேலைநிறுத்தத்தைமுடிவுக்கு கொண்டுவருவதற்குஏற்றநடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க எரிபொருள்,மின்சக்திஅமைச்சர் கருஜெயசூரியாவைகேட்டுள்ளார்,

இவ்வேலை நிறுத்தம் தொடர்பாக இந்தியாவுக்கு விஜயத்தைமேற் கெண்டுள்ள பிரதமருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்தே கருஜெயசூரியாவுக்கு அங்கிருந்து இப்பணிப்புரையை விடுத்துள்ளார். இதற்கமைய நேற்று முன்தினம் பிற்பகல் அமைச்சர் கருஜெயசூரிய தலைமையில் தனியார் பஸ் உரிமையாளர்களிற்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அத்துடன், தென்பகுதியில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற பொதுவேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாத தனியார் பஸ்களுக்கும்,மக்கள் மயமாக்கப்பட்டபஸ்களுக்கும்பாதுகாப்பு வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் சகல பொலிஸ் நிலையங்களுக்குப் உத்தரவிட்டுள்ளார், (உ-8)

## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 04

(உற்சவகாலம்)



### அலைகடல் தாண்டி வாருங்கள்!

அலைகடல் தாண்டி வாருங்கள்
அன்னையின் புகழைப் பாடுங்கள்
மலைமகள் உமையாள் வரமருள்வாள்
மங்கல நயினை வரவேற்கும்
கலைபொலி நயினைத் திருப்பதியைக்
காத்திடும் அன்னை நாகம்மை
நிலைபெறு சக்தி எம்வாழ்வில்
நித்தம் எமக்கருள் நல்கிடுவாள்!

நயினை கவிஞர்- இராகுலன்

### வரவேண்டும் வீதியுலாவே!

நயினையிலே வீற்றிருக்கும் நாகம்மாளே
வரவேண்டும் வரவேண்டும் வீதியுலாவே
இன்னல் வாழ்வு எம்மை விட்டு நீங்கிடவே
வரவேண்டும் வரவேண்டும் வீதியுலாவே.

கண்ணையிமை காப்பதுபோல் எம்மையெல்லாம்
அயராது அரவணைத்துக் காத்திடவே
கையேந்தி நிற்கும் பக்தர்கட் கெல்லாம்
பை நிறைய உண்பதற்கு வழிகாட்டிடுவாயே

சி. திருச்செந்தூரன்

### நயினைத் தாய் நலமே அருள்வாய்

குயிலும் குழலும் குனியும் குரலாய்
வெயிலும் விரிநன் முகிலும் எமக்கோ
பயில்வெண் மணல்சேர் பரவைப் பதிவாழ்
நயினை உறைதாய் நலமே அருள்வாய்.

சிவ. சண்முகவடிவேல்

### மீளும் சக்தி வேண்டும்

ஆறுதலைத் தருபவளே நயினை நாகம்மா!
ஆனந்தம் தருபவளே நயினை நாகம்மா!
மீறுகின்ற துயரங்களில் இருந்தே-நாம்
மீளுகின்ற சக்தியினை மாண்புறவே தாருமம்மா!

த. அஜந்தகுமார்

### குன்றிடாது அருள்வாய் குலபூஷணியே!

உலகெலாம் உவக்கும் ஒருதனிச் சக்தியாய்
உத்தமத் தெய்வமாய் உவந்திடும் தாயாய்
அலகிலாச் சக்தியாய் ஆழ்கடல் அமுதாய்
அன்பர் உள்ளத்(து) அகப்படும் தெய்வமாய்
நிலவிநீ நிற்பதால் நின்னையே புகலாய்
நினைக்கிறார் அன்னையே நிம்மதி வேண்டி
குலமெலாம் வாழக் குறைவிலா நிறைவாய்
குன்றிடாது அருள்வாய் குலபூ ஷணியே!

நயினைக் கவிஞர்-நாகசண்முகநாதபிள்ளை

### தவிப்பவர்க் கமைதியைத் தந்திடம்மா

சிற்பம் நிறைந்திடுங் கோபுரத் துடனிங்கு
சிறப்புறு மண்டபங் கொண்டவளே
அற்புதங்கள் செய்யு மன்னையே அருள்மிகு
அழகிய நயினையின் நாயகியே
தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும்
எத்திசை யிலுமுள்ள அடியார்கள்
ஒற்றுமையாக இச் சித்திர பானுவில்
கொடியேற்றங் கண்டிட வைத்தவளே
தத்தரி கிடதோம் தகததிங் கிணதோம்
தகதிமி தகதிமி என்றிங்கே
நர்த்தன மாடியுன் பக்தர்கள் கனவினில்
தரிசனந் தந்தருள் புரிபவளே
எத்தனை யுயிர்களை இழந்தது எம்மினம்
உத்தமியே யினிப் போதுமம்மா
தப்பினை மன்னிக்குந் தாயன்றோ நீயிங்கு
தவிர்ப்பவர்க் கமைதியைத் தந்திடம்மா

கவிமணி-அன்னைதாஷன்

# வாழும்போதும் இறந்த பின்னும் புதுமை செய்யும் வரம் பெற்ற புனிதர் புனித அந்தோனியார்





கத்தோலிக்க மக்களாலும், இந்து மக்களாலும் பெரிதும் விரும்பி வேண்டப்படுகின்ற புனிதர் புனித அந்தோனியார். பாஷையூர், மானிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மண்ணங்காடு, தாழையடி, கிளாலி, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, விளான், பண்டத்தரிப்பு, சுன்னாகம், மாதகல், நாவற்குழி, அச்சுவேலி, அளம்பில், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி போன்ற இடங்களில் புனித அந்தோனியார் திருவிழாக்கள் கொண்டாப்படுகின்ற வேளையில் புனித அந்தோனியாரின் பக்தர்களுக்காக இக்கட்டுரை பிரசுரமாகிறது. (ஆசிரியர்)

புனித அந்தோனியார் இன, மதங்களைக் கடந்த ஒரு பொதுப் புனிதர். புனித அந்தோனியாருக்கு உலகம் முழுவதிலும் கட்டி எழுப்பப்பட்டுள்ள ஆலயங்களும், யாத்திரைத் தலங்களும் அங்கு வந்து குமிகின்ற இலட்சோப இலட்சம் பக்தர்களின் தொகையும் புனித அந்தோனியாரின் புகழை என்றுமே பாடிக் கொண்டிருக்கிறது.

இலங்கையில் கொச்சிக்கடை புனித அந்தோனியார்பதி சிங்களம், தமிழ் என்ற வேறுபாடின்றி இலங்கை மக்கள் அனைவருக்குமான ஒரு தேசிய யாத்திரை ஸ்தலமாகும். அதற்கு அடுத்ததாக புதுமையிலும், புகழிலும் பெயர் பெற்று விளங்கும் ஆலயங்களுள் ஒன்றாக பாசையூர் புனித அந்தோனியார் ஆலயம் விளங்குகிறது எனலாம். பாசையூர் புனித அந்தோனியார் திருவிழா 13ஆம் திகதி காலை 7.00 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படுகிறது.

## மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலம்



மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய அழகுமிகு முகப்புத் தோற்றம்

மானிப்பாயில் அமைந்துள்ள புனித அந்தோனியார் யாத்திரை ஸ்தலமும் வட பகுதியின் பெயர் பெற்ற புனித அந்தோனியார் யாத்திரை ஸ்தலங்களுள் ஒன்றாகும். வளர்ந்துவரும் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தல பெருவிழா யூன் மாதம்13ஆம் திகதியின் பின்னர் வரும் ஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வாண்டுக்கான மானிப்பாய் புனித அந்தோனியாரின் திருவிழாவானது எதிர்வரும் 16ஆம் திகதி காலை 7.15 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கொண்டாடப்பட விருக்கிறது. வேஸ்பர் ஆராதனைகளை 15ஆம் திகதி மாலை வடமாகாண அமல மரித்தியாகிகளின் முதல்வர் அருள் திரு ஜீவேந்திர போல் அடிகள் நிகழ்த்தவுள்ளார். இவ்வாண்டு மானிப்பாய்ப் பதியின் இடப்புற காணி கொள்வனவு செய்யப்பட்டு முன் முற்றம் பெரிதாக்கப்பட்டுள்ளதுடன் ஆலயத்தின் முன் முகப்பும் கட்டி அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சி தருகிறது.


## பாசையூர் புனித அந்தோனியாரின் 152வது ஆண்டுக் கொண்டாட்டம்

பாசையூர் புனித அந்தோனியார் திருவிழாவானது வட பகுதி பக்தர்கள் அனைவரினதும் கவனத்தையும் பக்தியையும் ஈர்க்கும் ஒரு முக்கிய திருவிழாவாக விளங்கி வருகிறது. கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாசையூர் ஆலயம் சேதமுற்றமையும் பாசையூர்பங்குமக்களும் புனிதஅந்தோனியாரின் பக்தர்கள் அனைவரும் இடம் பெயர்ந்து செல்ல நேரிட்டமையும் துரதிஷ்டவசமானதே. புனித அந்தோனியாருடைய ஆலயத்தின் 150ஆவது ஆண்டு நிறைவைக் கூட வெகு சிறப்பாக கொண்டாட புனித அந்தோனியார் பக்தர்களுக்கு கொடுத்து வைக்கவில்லை. மாபெரும் இடம் பெயர்வின் பின்னர் திரும்பி வந்து திருவிழாக்களை கொண்டாடவும் ஆலயப் புனரமைப்பு வேலையைச் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவாயினும் இவ்வாண்டுதான் அவை முழுமை பெற்றுள்ளன என்று கூற வேண்டும்.

ஆலயம் முழுமையாகத் திருத்தி அமைக்கப்பட்டு அழகுற தன் பழைய காட்சியைத் தருகிறது. பாசையூர் பங்கு மக்களும் அந்தோனியார் பக்தர்களும் திரும்பவும் தம் சொந்த இடங்களுக்கு திரும்பி வந்துள்ளார்கள். நாட்டிலே தோன்றியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமும் சமாதான நடவடிக்கையும் பாசையூர் புனித அந்தோனியாரின் 152 ஆவது ஆண்டு நிறைவுத் திருவிழாவை சிறப்பாகக் கொண்டாட எல்லோரது மனதுகளிலும் அமைதியையும், மகிழ்வையும், நிறைவையும் தோற்று வித்துள்ளது. புனித அந்தோனியாரது 152ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்களை நிகழ்த்தும்போது புனித அந்தோனியார் தமது பரிந்துரைகளாலும் புதுமைகளாலும் கடந்த காலயுத்தஅனர்த்தங்களில் இருந்து தம் பக்தர்களை பாதுகாத்தமைக்காக அவரிற்கு நன்றி கூறி இந் நன்றியின் பெருவிழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்.

## அந்தோனியார் விழா பாசையூரில் மட்டுமல்ல

பாசையூரில் மட்டுமல்ல மானிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மணங்காடு, தாழையடி, கிளாலி, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, விளான், பண்டத்தரிப்பு, சுன்னாகம், மாதகல், நாவற்குழி, அச்சுவேலி, அளம்பில், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி போன்ற இடங்களிலும் புனித அந்தோனியார் கோவில் கொண்டெழுந்தருளி தம்மக்களையெல்லாம் தம் பரிந்துரைகளாலும் புதுமைகளாலும் கடந்த கால துன்பதுயர அனுபவங்களில் பாதுகாத்தமைக்காக நன்றியின் விழாக் கொண்டாடுவோம்.



பாசையூர் புனித அந்தோனியார் ஆலய அழகு மிகு முகப்புத் தோற்றம்

உலகெங்கும் வாழும் புனித அந்தோனியாருடைய பக்தர்கள் புனித அந்தோனியாருக்கு பெருவிழா எடுத்துக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் புனித அந்தோனியாருடைய இறப்பினையும் இறப்பின் பின் புனிதர் பட்டத்திற்காக நடந்த நிகழ்வுகளையும் இக் கட்டுரையின் இனி வரும் பகுதியில் பார்ப்பது நன்மை பயக்கும்.

## புனித அந்தோனியாரின் இறப்பு

புனித அந்தோனியார் புதுமைகளால் நிறைந்து விளங்குகின்ற ஒரு புனிதர். அவர் 1231ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறந்தார். அவர் இறந்து ஒரு மாதம் முடிவதற்கு முன்னதாகவே அவரிற்கு புனிதர் பட்டம் கொடுக்க வேண்டும் என்ற விண்ணப்பங்கள் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டன. புனித அந்தோனியார் வாழும்போதும் புதுமை செய்தார். இறந்த பின்பும் புதுமை செய்தார். இதனாலேயே மிகக் குறுகிய காலத்திலேயே இவரிற்கு புனிதர் பட்டத்திற்கான விண்ணப்பங்கள் மிக விரைவாக அனுப்பப்பட்டன.

புனித அந்தோனியார் இறந்த பின்னர் ஒவ்வொரு நாளும் கல்லறையில் புதுமைகள் நடந்து கொண்டே இருந்தன. அவற்றை எல்லாம் ஒழுங்குக் கிரமமாக வரலாற்று அடிப்படையில் சேகரித்து அப்போது திருத்தந்தையாக இருந்த 9ஆம் கிரகோரியார் பாப்பரசரிடம் ஒப்படைத்தார்கள். 9ஆம் கிரகோரியார் பாப்பரசர், பாப்பரசர் ஆவதற்கு முன்னர் கருதினாலாக இருந்தபோது புனித அசிசி பிரான்சீசின் நண்பர். அந்தோனியாரை அந்தக் காலத்தில் மிக நன்றாக அறிந்திருந்தவர். அவரது புதுமைகளையும், போதனைகளையும் பார்த்தும், கேட்டும் அறிந்தவர். எனவே அந்தோனியாரிற்கு புனிதர் பட்டம் வழங்க வேண்டும் என்ற விண்ணப்பங்களை மகிழ்வோடு ஏற்றுக்கொண்டார்.

## புனிதர் பட்ட விசாரணைகள் ஆரம்பம

விண்ணப்பங்கள் அனைத்தும் விசாரணைக் குழுவிடம் கையளிக்கப்பட்டது. ஆயர்கள், குருக்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மாணவர்கள், பதுவை நகரின் பெரிய மனிதர்கள் அனைவரும் அந்தோனியாருக்கு புனிதர் பட்டம் வழங்கும்படி திருத்தந்தையிடம் மன்றாட்டமாகக் கேட்டார்கள். கல்லறையில் நடந்த புதுமைகள்,அதிசயங்கள் அவற்றை நேரில் பார்த்தவர்களின் தகவல்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு திருத்தந்தை மூலமாக விசாரணைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எல்லாம் நிறைவேறிற்று, புனிதர் பட்டம் இதோ கிடைக்கப் போகிறது என்று எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்ட வேளையில் விசாரணைக் குழுவினரோ - எதற்காக இவ்வளவு அவசரம். இப்போ புனிதர் பட்டம் வழங்க முடியாது, அதற்குக் கால அவகாசம் தேவை - என்று அறிவித்து விட்டார்கள். அதிர்ச்சியும், கவலையும், ஏமாற்றமும் எல்லார் மனதுகளிலும் நிறைந்துவிட்டது! அந்நிலையிலேதான் புனித அந்தோனியாரின் இன்னுமொரு புதுமை நடைபெற்றது. விசாரணைக் குழுவின் நடைமுறைகளை நெறிப்படுத்திய தலைமைக் கருதினால் ஒரு கனவு கண்டார். அக்கனவிலே ஒரு புதிய கோவிலை அபிசேகம் செய்வதற்காகப் பாப்பரசர் ஆயத்தமாக இருந்தபோது புனித பண்டங்கள் அங்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. பாப்பரசர் அங்கும் இங்கும் திரும்பிப் பார்க்க வேண்டியதாயிற்று. அப்போ ஒரு பிரேதப் பெட்டியை ஆலயத்தினுள் கொண்டு வந்தார்கள். அதனைத் திறந்து வாசனைத் திரவியங்களை எடுத்து வாருங்கள் எனப் பாப்பரசர் கட்டளையிட்டார். அப்பெட்டியைத் திறந்தபோது அங்கு நின்றவர்கள் அனைவரும் உள்ளிருந்த பிரேதத்தின் அழகையும் அதில் இருந்து வெளிவந்த வாசனையையும் கண்டு அப்படியே பிரமித்துப்போய் நின்று விட்டனர். இதுவே அவர் கண்ட கனவ.
கனவு.

அப்பிரேதம் புனித அந்தோனியாருடையது என அறிந்து கொண்ட அந்தத் தலைமை கருதினால் அந்தோனியாருக்குப் புனிதர் பட்டம் கொடுக்க உடனடியாகவே தமது சம்மதத்தை தெரிவித்தார். 1231ஆம் ஆண்டு யூன் மாதம் 13ஆம் திகதி இறந்த அந்தோனியாருக்கு 1232ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் நாள் பரிசுத்த ஆவியின் திருநாளின்போது புனிதர் பட்டம் வழங்கப்பட்டது. இறந்து ஓர் ஆண்டு முதலாய் முடிவதற்கு முன்னதாக புனிதர் பட்டம் பெற்றுக் கொண்டவர் புனித அந்தோனியார். பழமை வாய்ந்த ஸ்பொலேத்தோ நகரின் மறைமாவட்ட ஆலயத்தில் இவருக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.

## புனித அந்தோனியாரின் புனிதர் பட்ட நிகழ்வு

வயது முதிர்ந்த பாப்பரசர் 9ஆம் கிரகோரியார் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க ஆயர்கள், பிரபுக்கள், குருக்கள் அவரைச் சூழ்ந்திருக்க புனித அந்தோனியாரின் 56 பெரிய புதுமைகளை வாசித்து சாட்சியப்படுத்திய கருதினால் அவருக்கு புனிதர்பட்டம் வழங்கும்படி பாப்பரசரை வேண்டிக் கொண்டார். அப்போது பாப்பரசர் எழுந்து நின்று அந்தோனியாரைப் புனிதர் பட்டியலில் சேர்த்துக் கொள்வதாகவும் அவரது திருநாளை வருடந்தோறும் யூன் 13ஆம் திகதி கொண்டாடலாம் என்றும் அறிவித்தார்.

புனிதர் பட்டம் வழங்கப்பட இருப்பதாக அவர் பிறந்த பட்டினமான லிஸ்பன் நகர மக்களும், நண்பர்களும், உறவினரும் அறிந்திருந்தார்களே தவிர எப்போ அவரிற்கு புனிதர் பட்டம் வழங்கப்படும் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் எந்த அறிவித்தலுமின்றியே லிஸ்பன் நகரம் என்றுமில்லா மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது. கோவில் மணிகள் தாமாகவே அடிக்கத் தொடங்கின. இந்த வியப்பிற்குரிய சம்பவங்கள் நடைபெற்ற பின்னர்தான் அந்தோனியாரிற்குப் புனிதர் பட்டம் வழங்கப்பட்ட நிகழ்வை லிஸ்பன் நகர மக்கள் அறிந்து கொண்டார்கள். இதுவும் புனித அந்தோனியாரின் புதுமைகளில் ஒன்றே.

அந்தோனியாரின் புனிதர் பட்ட நிகழ்வு பற்றிய அறிவிப்புக் கடிதத்தை 1232ஆம் ஆண்டு யூன் மாதம் 1ஆம் திகதி பதுவை நகர் மக்களுக்கும் அதே ஆண்டு யூன் மாதம் 23ஆம் திகதி அகில உலகத்திற்கும் பாப்பரசர் வெளியிட்டார். அந்தோனியார் மரிக்கும்போது அவரிற்கு வயது 36 மட்டுமே. அவருடைய உறவினர்களும், நண்பர்களும், ஊரவர்களும் அவருடைய புனிதர் பட்ட நிகழ்வில் மகிழ்வோடு கலந்து கொண்டார்கள். அந்தோனியாரின் தாயாரும் புனிதர் பட்ட நிகழ்வு வேளை உயிருடன் இருந்ததாகவும் அவரைப் புனிதராக வேண்டிக்கொள்ளும் பாக்கியத்தை பெற்றுக் கொண்டதாகவும் அத்தாய் கூறியதாக அறியவருகிறது.

## புனித அந்தோனியாரிற்கு ஆலயமும் அழிவுறாத நாக்கும்

புனிதர் பட்டம் வழங்கப்பட்ட பின்னர் புனித அந்தோனியாருக்கு பதுவை நகரில் ஓர் அழகிய ஆலயம் கட்டப்பட்டது. 1263ஆம் ஆண்டு பிரான்சிஸ்கன் சபைத் தலைவரும் மறை வல்லுநருமான புனித பொனவெந்தூர் பதுவை நகரிற்கு வந்தார். அவர் புனித அந்தோனியாரின் பக்தியை இன்னும் அதிகமாக பரப்பத் தீர்மானித்து அவரது திருவுடல் புதிய ஆலயத்தின் பெரிய பீடத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என உத்தர விட்டார். புனித அந்தோனியாரது பேழையைத் திறந்த போது அவரது நாக்கு செக்க செவேலென சிவப்பாக அழியாமல் உயிருடன் இருப்பதுபோல் காட்சியளித்தது. புனித பொனவெந்தூர் அந்தோனியாரது நாக்கை எடுத்து "ஓ ஆசீர்வதிக்கப்பட்ட நாவே, நீ ஆண்டவரை எப்போதும் வாழ்த்தி வந்தாய். பிறரும் அவரை வாழ்த்தும்படி செய்தாய். கடவுளிடம் நீ எத்துணை மகிமை பெற்றிருக்கிறாய் என்பது தெளிவாக விளங்குகிறது" என்று சொல்லி முத்தமிட்டு அந்நாவை தனியாக எடுத்து பத்திரமாகவும் பரிசுத்தமாகவும் வைக்கும்படி உத்தர விட்டார்.

## புனித அந்தோனியாரின் சுருபக் காட்சியின் விளக்கம்

புனித அந்தோனியாரது சுருபத்தை நாம் பார்த்து எமது வரங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறோம். அவரது சுருபத்தின் கரத்தில் லீலி மலரொன்று எப்போதும் காணப்படுகிறது. இது அவரது தூய உள்ளத்தைக் குறித்துக் காட்டுகின்றது. அந்த லீலி மலர் மொட்டானது உயர்ந்து மேல் நோக்கி பார்த்துக் கொண்டிருக்கின்றது. மோட்சத்தின் பக்கமாய் அது பார்த்துக் கொண்டு நின்று புனித அந்தோனியாரது விருதுவாக்கை நமக்கெடுத்துரைக்கிறது.

- அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை -

## இன்று ஒரு தகவல்

### சந்தர்ப்பவாதம்

தத்துவவியலாளர்களால் எத்தனையோ வாதங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் சமகாலத்தில் செல்வாக்குச் செலுத்துவதாகவும், முனைப்புடையதாகவும் முக்கியத்துவம் பெறுவது சந்தர்ப்பவாதம். இது உள் பொருளாகவும் வெளிப்படையாகவும் கிராமத்தை மட்டுமல்ல, உலகத்தையே உலுக்கின்றமை கண்கூடு. தெரிந்தோ, தெரியாமலோ செய்வதையெல்லாம் செய்துவிட்டு மற்றவர் மனம் புண்படமற்றவர் கௌரவத்தைத் தற்காலிகமாகப் பாதிக்கச் செய்துவிட்டு அதன் பின் 'சொறி' எனச் சொல்வது மனதார ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றல்ல. ஒருவரைச் செருப்பால் அடித்துவிட்டு பின்னர் அவ்விடத்தைப் பூவால் தடவுவதன் மூலம் பிரயாச்சித்தம் கிடைத்துவிடும் எனக் கருத முடியாது. கருதவும் கூடாது.

ஒருவர் தன் வீட்டாருடனோ, நண்பர்களுடனோ, உறவுகளுடனோ, தொழில் ஸ்தாபனத்திலோ, அல்லது சமூக அமைப்புகளுடனோ, செயலொன்றைச் செய்யும் போதோ, ஒரு விடயத்தைப் பேசும்போதோ, அதற்கு முன்பாக ஒரு தடவைக்குப் பல தடவைகள்யோசிக்க வேண்டுமேயன்றி, முடிந்தபின் யோசிப்பதில் பயனேதுமில்லை. தெரியாது செய்த குற்றமேயாயின் இரு தரப்பினரும் மன்னிக்கலாம். எனினும் அதற்கும் ஒரு எல்லை உண்டு. அதனால் தானோ தண்ணீரும் மூன்று பிழை பொறுக்கும் என்ற உண்மையை உதாரணமாக்கி தமிழ் அகராதியில் சேர்த்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. ரோசம் என்னும் வஸ்து உள்பொருளானது மற்றவரின் கண்களுக்கு அது தெரியாது. கண்டுபிடிக்கவும் முடியாது. அது உயிரினும் மேலானது. அதைச் சமூகம் விழிப்புடன் எவ்வேளையிலும் அவதானித்துக் கொண்டிருக்கும் என்பதுமட்டும் உண்மை. எனவே அதற்கேற்ப செயற்பட வேண்டியது மனிதனின் பண்பு.

போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் என்பதை அங்கீகரிக்கும் அதே வேளையில் போற்றுபவர் தூற்றுவதையும், தூற்றுபவர் போற்றுவதையும் ஏற்றுக் கொண்டால் ரோசம் என்ற வஸ்து அர்த்தமுடையதாகாது.

ஒருவர் மற்றவரைப் பிழையான வழியில் கேவலப்படுத்துவானேயாகில் அவர் மீண்டும் கேவலப்படுத்துபவரின் உதவியை நாடக்கூடாது. பின் சுயநலத்துடன் தனது வருமானத்துக்கும், சுய தேவைக்கும் அவனை நாடிச் செல்லக்கூடாது.

மாறாக அப்படிப்பட்டவர்களுக்கு எமது சமூகம்கூட அவர் அப்படித்தான். காலை தூற்றுவார், மாலை போற்றுவார் அவரின் கதையை விடு. என்று கூறுமேயன்றி, அவரைத் திருத்த முயல்வதில்லை.

அரைக் காசுக்குப்போன மானம் ஆயிரம் காசு கொடுத்தாலும் திரும்பிவராதன்றோ. எனவே இந்த கொப்பா வார்த்தைகளை அளந்து பேசி, பேசமுன் ஒரு தடவைக்குப் பலதடவைகள் யோசித்து பேசி சிந்தித்துச் செயலாற்றி பிறர் மீது பொறாமை கொள்ளாமல் இன்பமே சூழ எல்லோரும் வாழுவோம். ●

மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்

சாவகச்சேரி வடக்கு

## பாரிய முகாமை விட்டு படையினர் வெளியேற்றம்

(மந்திகை)

சாவகச்சேரி வடக்கு மடத்தடிப்பகுதியில் அமைந்திருந்த பாரிய படைமுகாமிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் வெளியேறியுள்ளனர்.

இரண்டாயிரமாம் ஆண்டு மேமாதம் தென்மராட்சி பிரதேசத்தில்நடைபெற்றயுத்தத்தினால் பொதுமக்கள் வெளியேறிய பின் சுமார் 30ஏக்கர் நிலப்பரப்பில் 60ற்கும் மேற்பட்ட வீடுகளை உள்ளடக்கி இப்பகுதியில் படையினர் முகாம் அமைத்தனர்.

அரசுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சமாதான உடன்படிக்கையை அடுத்தும், மீளக்குடியமர்ந்த மக்களின் கோரிக்கையை அடுத்தும் படையினர் வெளியேறியுள்ளனர். (உ-23)

## தடைநீக்க கோரிக்கையை புலிகள் கைவிட வேண்டும்

### பொ.ஐ.மு.பொதுச்செயலாளர்

(கொழும்பு)

தனிநாட்டுக் கோரிக்கை மற்றும் பேச்சுவார்த்தைக்கு முன் தம்மீதான தடைநீக்கம் ஆகிய கோரிக்கைகளை விடுதலைப்புலிகள் கைவிட வேண்டுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி. எம். ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசிய முன்னணி அரசின் சமாதான நடவடிக்கைகளுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்குவதற்கு கட்சியின் நிறைவேற்று அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளதாகவும்.

எனினும் விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கை மற்றும் அவர்கள் மீதான தடைநீக்கம் என்பவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதுஎன்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## இக்கட்டான நிலையில் பைக்கட் பால் உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

நிதி நெருக்கடி காரணமாக பாலினை பைக்கட்டுக்களில் அடைக்கும் தொழிலை மேற்கொள்ள முடியாதிருப்பதாக யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி பைக்கட்பால் உற்பத்திக்கென பல இலட்ச ரூபா செலவில் கட்டடம் அமைக்கப்பட்ட போதிலும், வேண்டிய உபகரணங்கள் வேறு பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நிதி இல்லாமையால் இப்பணி இடைநடுவில் உள்ளதாகவும்,

அந்நிதியினை வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து பெறுவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன (உ)

## விமான பாதுகாப்பு ஒப்பந்தத்தில்

# அமெரிக்கா- இலங்கை கைச்சாத்து

(கொழும்பு)

அமெரிக்காவும் இலங்கையும் பரந்த விமான சேவை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் கொலின்பவலும், இலங்கை வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோவுமே இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இவ்விருநாடுகளும் கைச்சாத்திடப்பட்டுள்ள இவ்வுடன்படிக்கை மூலம், இருநாடுகளுக்கும் இடையேயான விமான போக்குவரத்து சேவையின் பாதுகாப்பையும், விருத்தியையும் பேணமுடியும்எனவிமான போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்கா, இலங்கைஆகிய நாடுகளின் விமான சேவைகள் மீதான தாக்குதல்களை தொடர்ந்து இப்பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-8)

### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 8.15 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாலய பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தின் பூர்வாங்கக் கிரியைகள்நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றது. (உ-8)

### வருடாந்த உற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவை பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாலயத்தின் தேர், தீர்த்த உற்சவங்கள் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-79,8)

### அந்தோனியார் உற்சவம் இன்று

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி இன்று வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

முதலாவது திருப்பலி காலை 5.30 மணிக்கும் இரண்டாவது திருப்பலி யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் காலை 7.00 மணிக்கும் நடைபெறும். (த-6)

### ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று இடம்பெறவிருந்த வலயமட்ட மெய்வல்லுநர் போட்டிகள், ஹர்த்தாலை ஒட்டி நாளைய தினம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும்,

நாளைய தினம் காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் மேற்படி போட்டிகள் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

### இன்று சமயபாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெறவிருந்த சைவசமய பாடக்கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது என சைவ பரிபாலன சபை பரீட்சை செயலாளர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (உ-8)

### உலருணவு அட்டைகள் மீளாய்வு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசெயலர் பிரிவிலுள்ள குடும்பங்களின் உலர் உணவு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு புதிய உலர் உணவு அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கமைய, கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக உலர் உணவு அட்டைகள் மீளப் பெறப்பட்டு வருகின்றன. (உ-23)

## நாட்டில் "டெங்கு" அபாயம் மூவாயிரம் பேர் பாதிப்பு

### 70 பேர் மரணம்

(கொழும்பு)

கடந்த ஆறுமாத காலப் பகுதியில் இலங்கையில் சுமார் 3ஆயிரம் பேருக்கு டெங்குக் காய்ச்சல் பரவிஉள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

டெங்குக் காய்ச்சலால்பீடிக்கப்பட்டுள்ளமூவாயிரம்பேரில் சுமார் 70பேர் வரையில் மரணமடைந்துள்ளனர்.

கொழும்பு, வத்தளை, தெஹிவளை ஆகிய நகரப் பகுதிகளிலேயே பெரும்பாலானோர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். (வ)

## மத்தியவங்கி குண்டு வெடிப்பு இரகசிய விசாரணை கொழும்புமேல் நீதிமன்றில்

(கொழும்பு)

மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தொடர்பான இரகசிய விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்றுமுன் தினம் இடம் பெற்றது.

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணையில் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திற்குப் பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ்மாதிபர் புண்ணிய சிறிடி சில்வா சாட்சியமளித்தார்.

இவரது சாட்சியம் இரகசியமாகப் பதிவு செய்யப்பட்டதுடன், அச்சந்தர்ப்பத்தில்நீதிமன்றத்தில் இருந்த ஏனையோர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். (த)

## 3 உயர் அதிகாரிகள் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த மூன்று உயர் அதிகாரிகள் அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

ஹெல்மிறு நீதவான் நீதிமன்றத்திற்கு தாங்கள் சமுகமளித்திருந்த போது எந்தவித காரணமுமின்றி கைது செய்யப்பட்டுள்ளதாக அவ் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நூக்காந்த சந்திரலேகதம் பதியினர் தாக்கப்பட்டது தொடர்பான அடையாள அணிவகுப்புத் தினத்தன்று நீதிமன்றத்துக்கு சென்ற வேளையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு காரணமின்றி கைது செய்யப்பட்டுள்ளமையானதுஅடிப்படையுரிமைகள் மீறல் என நீதிமன்றம் பிரகடனம் செய்யவேண்டும் என்றும்,

தங்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 இலட்சம் ரூபா நஷ்டஈடாகப் பெற்றுத்தர வேண்டும் என்றும் அந்தமனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டமாஅதிபர், பொலிஸ் மா அதிபர், மற்றும் பல சிரேஷ்ட அதிகாரிகள் பிரதிவாதிகளாக அம் மனுவில் குறிப் பிடப்பட்டுள்ளனர். (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

### ஐரோப்பிய நாடுகள் திருப்பி அனுப்பினால்?

இலங்கையின் மக்கள் மூன்றுலட் சம்பேர்
அகதிகள் என்றபேர் கொண்டு
நலங்களைத் தமக்கும் தம்முற வோர்க்கும்
நல்கிடச் சென்றஐ ரோப்பாப்
புலங்களி லிருந்து மீட்டுமே இங்குப்
போந்திடச் செய்யும்ஒப் பந்தம்
கலங்கவே வைக்க, 'இனிஎமக் கென்ன
கதி'யெனத் துயருறு வாரே!

-பழையவன்

# இலங்கையின்சட்ட அமைப்பு தமிழர்களுக்கு எதிரானது

## அருட் திரு. ஜெயக்குமார் அடிகளார் தெரிவிப்பு

(தென்மராட்சி)

இலங்கையிலே சட்ட அமைப்பு முறை எப்பொழுதுமே தமிழ்மக்களுக்கு எதிராகவே இருந்து வந்துள்ளது. அதன்காரணமாக சட்ட ரீதியாகக் கூட தமிழ்மக்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகின்றது என்றஎண்ணப்பாங்கு தமிழர்கள் மத்தியில் நிலவி வருகின்றதுஇத்தகையநிலைப்பாட்டினை இல்லாமல் செய்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு முனைப்புஎடுக்க வேண்டும்.

என கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளரான அருட் திரு. சீ. ஜீ. ஜெயக்குமார் யாழ்ப்பாணம் வருகைதந்திருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கொட்பிறி குணதிலகவிடம் கேட்டுக்கொண்டார்.

அவர்அங்கு மேலும் குறிப்பிட்டசமயம், இன்றைய கால கட்டத்தில் குடாநாட்டின் பல இடங்களில் அரசமரங்கள் நாட்டப்பட்டு அதனருகில் புத்தர் சிலைகள் அமைக்கப் பட்டுவருகின்றன.

நாம் பௌத்தசமயத்துக்கு என்றுமே எதிரானவர்கள் அல்ல. ஆயினும் குடாநாட்டில் ஏலவே அடையாளப் படுத்தப்பட்டஇந்து,கிறிஸ்தவ மதங்களில் அடையாளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் அந்நியப்படுத்தப்பட்டுவிடக் கூடிய வாய்ப்புகளே கூடுதலாகக் காணப்படுகின்றன. எனவே இதுபற்றிய விடயத்திலும் மனிதஉரிமைகள் ஆணைக்குழுகவனம்செலுத்த வேண்டியுள்ளது எனவும் எடுத்துக்கூறினார்.

இச்சந்திப்பின்போது மனித நேயஅமைப்புகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த அருட்பிதா ஏ. ஜ. பேர்னாட் அடிகள் குறிப்பிடுகையில்;

குடாநாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு அவசியம் ஏற்படுத்தப்படல் வேண்டும். மனிதனாகப் பிறந்துவிட்ட யாவருமே தமது உரிமைகள் என்ன என்பதுபற்றி அறிந்து கொள்ளவேண்டும் என்றார். (ந-77)

# யாழ்.மாநகர முதல்வர் மீது வெடி கொளுத்தி வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நடைபாதையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் விசமச் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாக, பொதுமக்கள தமக்கு முறைப்பாடு செய்வதாக, யாழ். மாநகர சபை மேயர் எஸ். கந்தையன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் வகையில் வெடிகளை கொளுத்திப் போடுதல் மற்றும் ஈர்க்கு வானத்தை குறுக்காக பறக்க விடுதல் ஆகிய செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுவதாகவும், இதனால் நகரப் பகுதிக்குசெல்வதில் அச்சம் நிலவுவதாகவும் மேயர் மேலும் தெரிவித்தார்.

இவை குறித்து நேற்று மாலை நேரில் அவதானிக்க நகரப் பகுதிக்கு தான் சென்ற போது, தமக்கு அருகில்வெடி கொளுத்தி விசமச் செயற்பாட்டில் அங்கு நின்றவர்கள் ஈடுபட்டதாக தெரிவித்த மேயர், இவ்விடயம் குறித்து யாழ்.பொலிஸில் முறையிட்டதாகவும் கூறினார்.

இதேவேளை இது போன்ற விசமச் செயற்பாடுகள் தொடர்ந்தால் நகரில் இருந்து நடைபாதை வியாபாரிகள் அனைவரும் அப்புறப்படுத்தப்படுவர் என்றும் எச்சரித்துள்ளார். (இ)

# ஆயிரத்து 200 குடும்பங்கள் மீள குடியமர்வு

(தென்மராட்சி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள 17 கிராம சேவையாளர் பிரிவுகளில்மொத்தமாக வாழ்ந்த 3 ஆயிரத்து 416 குடும்பங்களுள தற்போது மாமுனை முதல் சுண்டிக்குளம் வரையுள்ள பகுதியில் சுமார் 1200 குடும்பங்கள் மட்டுமே மீளக் குடியமர்ந்துள்ளன எனத் தெரிய வந்துள்ளது.

இங்கு மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் அடிப்படைத்தேவைகள் இன்னமும் வழங்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது. (த-77)

# அச்செழு மெதடிஸ் மிஷன் மீளவும் சொந்த இடத்தில்

(யாழ்ப்பாணம்)

அச்செழு மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை நாளை வெள்ளிக்கிழமை முதல் மீளவும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

1995 ம்ஆண்டு முதல் பாடசாலையில் நிலை கொண்டிருந்த இராணுவம்தற்போது அங்கிருந்து வெளியேறியதை அடுத்தே இப் பாடசாலை மீளவும் இயங்கவுள்ளது.

கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அன்றைய தினம் பாடசாலையை வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார். (த-9)

# சாவகச்சேரியின் 90வீதமானபகுதியில் மக்கள் மீள குடியமர முடியாத நிலை

(தென்மராட்சி)

தென்மராட்சி யுத்தத்தின் போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இருக்கின்ற நுணாவில் கிழக்கு, மேற்கு, மத்தி, கோவில் குடியிருப்பு, சாவகச்சேரி நகரம் ஆகிய 5 பிரிவுகளில் இருக்கக்கூடிய 2ஆயிரத்து 371 குடும்பங்களுள்இதுவரை 145 குடும்பங்களே மீளக்குடியமர்ந்துள்ளன.

மீதியான 2 ஆயிரத்து 226 குடும்பங்கள் இன்னமும் வெவ்வேறு இடங்களிலேயே தங்கியுள்ளன.

முக்கியமாக இப்பிரிவுகளில் இருந்த குடியிருப்புக்களில் 90 சதவீதமானவை யுத்த அனர்த்தங்களின் போது அழிந்தும் சேதமடைந்தும் இருப்பதனால், அக்குடும்பங்கள் அங்கு மீளக்குடியமரமுடியாத நிலை தோன்றியுள்ளது.

மேலும் அழிந்த அல்லது சேதமடைந்த வீடுகளை உடனடியாக அத்தகைய குடும்பங்களினால் புனரமைப்புச் செய்வதற்குப் போதிய நிதிவளம் மற்றும் பொருள் வளம் இல்லாமை முக்கிய காரணியாகவுள்ளமை பற்றி அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி தெற்குப்பகுதியிலுள்ள நாவற்குளி மேற்கு, நாவற்குளி கிழக்கு, கோயிலாக்கண்டி ஆகிய பிரிவுகளில் இருக்கக் கூடிய மொத்தம் ஆயிரத்து 120 குடும்பங்களுள் இதுவரை 30 குடும்பங்கள் மட்டுமே மீளக்குடியமர்ந்துள்ளன.

நாவற்குளி மேற்கில் இருக்கக்கூடிய 543 குடும்பங்களில் 15 குடும்பங்களும் நாவற்குளி கிழக்கில் இருக்கக்கூடிய 321 குடும்பங்களுள் 14 குடும்பங்களும் கோயிலாக் கண்டியிலுள்ள 256 குடும்பங்களுள் 1 குடும்பம்மட்டுமே மீளக்குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த-77)

## ஆதாரம் காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையில் தவறவிடப்பட்ட நகைகள் கண்டெடுக்கப்பட்டு வங்கியின் முகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் தவறவிடப்பட்ட இந்த நகைகளுக்கு உரியவர் ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (த-2)

## ஒரு வீட்டில் 20 கோழிகள் இறப்பு

(காரைநகர்)

நாட்டில் அதிகரித்து வரும் வெப்பம் காரணமாக திடீரென கோழிகள் இறந்து வருவதாக தெரியவருகிறது.

கடந்த வாரத்தில் காரைநகர்ப்பகுதியில் ஒரு வீட்டில் மட்டும் இருபதுக்கும் மேற்பட்ட கோழிகள் இறந்துள்ளன. இவை இறப்பதற்குரிய நோய் அறிகுறி வெளிப்படையாக தென்படவில்லை எனவும் தெரியவருகிறது. (த-9,246)

## இந்திய முதலீடுகள் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

இலங்கையும் இந்தியாவும் கூட்டாக உற்பத்தி முயற்சியில் ஈடுபடுவதற்கு இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை டெல்லியில் நிதியமைச்சர் ஜஸ்வந்ஷிங்கவுடனான சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மீன்பிடி, ஆடைக்கைத் தொழில், பெருந்தோட்டத் தொழில் என்பவற்றில் இந்திய முதலீட்டை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் தான் பேசியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (த-9)

# பிரிட்டிஷ் தூதுவரால் மணிக்கூட்டுக் கோபுரம் 19ம் திகதி திறந்துவைப்பு

(தென்மராட்சி)

புனரமைப்புச் செய்யப்பட்ட 127 வருட பழமை வாய்ந்த யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக்கோபுரம் எதிர்வரும் 19 ஆம்திகதி பிரிட்டிஷ் தூதுவர் திருமதி லிண்டா டபில் பீல்ட்டினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

1875 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த வேல்ஸ் இளவரசரின் வருகையை நினைவுகூர்ந்து இம் மணிக்கூட்டுக்கோபுரம் நிர்மாணிக்கப்பட்டது.

இக்கோபுரத்தின் நிர்மாணப்பணிக்கென வேல்ஸ் இளவரசரின் வருகைக்கான வரவேற்புக்குழு 6 ஆயிரம் ரூபா பணத்தைவழங்க மீதியாகத் தேவைப்பட்ட 4 ஆயிரம் ரூபாவை அப்போதைய யாழ்ப்பாண சமூகம் அதன் பங்களிப்பாக வழங்கியிருந்தது.

கடந்த 20 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற எறிகணைவீச்சுக்கள், விமானத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச்சமர் போன்றவற்றின் போதெல்லாம் இம் மணிக்கூட்டுக்கோபுரம் தலை நிமிர்ந்து நின்றமை அக்காலக் கட்டட நிர்மாணிப்பின் மகத்துவத்துக்கு ஒரு சான்றாகவுள்ளது.

நீண்டகாலமாக இயங்காத நிலையில் கைவிடப்பட்டு இருந்த இம் மணிக்கூட்டுக் கோபுரத்தினைப் புனரமைப்புச்செய்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் 10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸை யாழ். மாநகரசபைக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம் மணிக்கூட்டுக்கோபுரத்துக்கான மணிக்கூடுகளை கொழும்பிலுள்ள பிரபல்யமிக்க மணிக்கூட்டுத்தயாரிப்பாளர்களான விமலதர்ம பிறதர்ஸ் அண்மையில் பொருத்தியுள்ளனர்.

யாழ்ப்பாண நகரத்தின் பெருமைக்கும், சிறப்புக்கும் சீர்சேர்ப்பதாக இம்மணிக் கூட்டுக்கோபுரம் மீண்டும் விளங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-77)

### சாவகச்சேரி சங்கத்தானையில்

# 61 வீடுகளில் இருந்து படையினர் வெளியேறினர்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் 61 வீடுகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனைஅடுத்து அப்பகுதிகளுக்குச்சென்று தமது வீடுகளை துப்புரவு செய்துவரும் பொதுமக்கள் மீள குடியமரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த திங்கள் முதல் சாவகச்சேரி தபால் அலுவலகத்திற்கு அருகில் புதிய இராணுவமுகாம்ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (த-247)

### கடவுச்சீட்டில் பெயர் மாற்றம் செய்து

# வெளிநாடு செல்ல முயன்ற இரு பெண்கள் கைது

(கொழும்பு)

கடவுச் சீட்டில் பெயர் மாற்றம் செய்து வெளிநாட்டுக்குச் செல்லவிருந்த இரு இளம் பெண்களை கட்டுநாயக்கா குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கல்பனி கங்கா என்ற சிங்களப் பெண் அக்கால் கமிக் நிஸார் என்ற முஸ்லிம் பெயரில் கடவுச் சீட்டை மாற்றி குவைத் நாட்டிற்கும், வவுனியா ரம்பைக் குளத்தைச் சேர்ந்த சரவணன் சசிகலா என்ற தமிழ்ப்பெண் முகமது சியாப் பகில்சயா என்ற முஸ்லிம் பெயரில் கடவுச் சீட்டை மாற்றி கனடாவுக்கும் செல்ல இருந்தனர்.

இவர்கள் இருவரும் கட்டு நாயக்கா விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றின்முன் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-9)

## திருடர் தொல்லை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியிலே அண்மைக்காலமாக திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் சீருடையினரால் வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து அப்பகுதிகளில் நுழையும் திருடர்கள் ஓடுகள், பலகைகள், நிலைகள், கம்பிகள் என்பனவற்றினை களவாடிச் செல்கின்றனர். (உ-262)

# சீன இராணுவம் எந்த நேரத்திலும் இலங்கைக்கு உதவி வழங்கும்

## அந்நாட்டு பாதுகாப்புஅமைச்சர்தெரிவிப்பு

சீனஅரசுஇலங்கையுடனான உறவுகளை மேலும் பலப்படுத்தி வருகிறது என சீனப் பாதுகாப்பு அமைச்சர் ரி ஹவோட்டியான் தெரிவித்துளளார்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைச் சீனாவில் சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு மிடையேயான நட்புறவை மேலும் தொடர வேண்டும். 1957 ல் இரு நாடுகளுக்குமிடையேயான இராஜதந்திர உறவுகள ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இருதரப்பு உறவுகள் மென்மேலும் வலுப் பெற்று வருகின்றது.

இதேவேளை திபெத், தாய்வான் போன்றவற்றுடனான மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச அழுத்தம் சீனாமீது ஏற்பட்ட போதும் இலங்கை தமக்கு வழங்கிய ஆதரவு பாராட்டத்தக்கது.

சீன இராணுவத்தினர் இலங்கைஇராணுவத்திற்குஎந்நேரமும் சகல ஒத்துழைப்பையும்வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா 13.06.2002

## ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

**ஸ்ரீ ரஸ்த்து**

**வாகீசாத்யாஸ் ஸு மநஸஸ் ஸர்வார்த்தாநாம் உபக்ரமே!**

**யம்நத்வா க்ருதக்ருத்யாஸ்யு தம் நமாமி கஜாநநம்!!**

எல்லாம் வல்ல சிந்தாமணி விநாயகப் பெருமான் சித்திரத் தேரிலே ஆரோகணித்து மஹோற்சவத்தில் அழித்லைக் குறிக்கும் தேர்த்திருவிழாவிலே பஞ்சமுக சிந்தாமணி விநாயகராக, பஞ்சபூத உருவில் சுடர் விட்டு எரியும் தீப்பிழம்பாக அக்கினி வடிவிலே, ஐம் புலன்களில் நேரும் தீயவற்றை பஞ்சகிருத்தியத்தில் அழித்தல் செய்து திருவருள் செய்ய பிரார்த்திப்பதுடன் நடைபெறும் சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாவும் சிறப்பாக நடைபெறவும், தெய்வீகத் திருப்பணியில் ஈடுபட்ட சகலருக்கும் எம்பிரான் அடியவர்களுக்கும், விநாயகர் சிற்பக்கலைஞர்கள் கலா பூசணம் சு. இராசரத்தினம் குழுவினருக்கும் திருவும், கல்வியும், சீரும் சிறப்பும், திருவடிப் புகழ் பாடிடும் திறமும், நல்லுருவும், ஊக்கமும், தாழ்வுறு உணர்வும் கொடுத்து தெய்வ இன்ப அனுபவம் எய்தி சிந்தாமணி விநாயகர் அருள் பெற்று வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

**ஓம் என்னும் மந்திர ரூபனை நாம் தொழுவோமே**

பிரம்ம ஸ்ரீ கணேசசபாபதி குருக்கள்
**சிந்தாமணி விநாயகர் ஆலயம்**

## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம் அமைதியும் இயற்கை வனப்பும் நிறைந்த சூழலில் அமைந்துள்ளது. சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே இவ்வாலயத்தின் வரலாறும் ஆரமபமானது. ஞானி ஒருவர் இப்பகுதியிலே தலவாழ்வு வாழ்ந்தாரென்றும் அவர், இங்கே விநாயகப் பெருமானைப் பூசித்தாரென்பதும் ஐதீகங்கள். இன்றும் பழைய தீர்த்தக்கேணி 'ஞானியார் கேணி' என்றே வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அடியாரொருவரின் கனவில் விநாயகப் பெருமான் தரிசனம் தந்து தமக்கு ஓர் இருப்பிடம் அமைத்துத் தருமாறு கேட்டதற்க்கிணங்க அவர் காசியிலிருந்து கொணர்ந்த விநாயக விக்கிரகத்தை, ஒரு சிறு குடிலமைத்துப் பிரதிஷ்டை செய்தாரென்றும் அவரைத் தொடர்ந்து பலர் ஆலயத்தைப் பரிபாலித்து வந்தனரென்றும் அறிய முடிகிறது.


1956 ஆம் ஆண்டிலிருந்து உபயகாரர்களின் பிரதிநிதிகளாகிய 'தானீசர்களைக் கொண்ட' தானீசர் சபையே ஆலயத்தைப் பரிபாலித்து வருகிறது. தானீசர்களால் தெரிவு செய்யப்பட்ட முகாமையாளர்களின் தலைமையில் ஆலயத் திருப்பணிகள் நிறைவேறியுள்ளன. மூலஸ்தானம் தொட்டு மகாமண்டபம் வரை கருங்கல் திருப்பணியாக அமைக்கப்பட்டுள்ளது. வானுற ஓங்கி நிற்கும் கம்பீரமான ராஜகோபுரம் அதற்கு முன்னர் அமைக்கப்பட்டுள்ள கலையழகுமிக்க முகப்பு மண்டபத்தோடு இணைந்த வசந்த மண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம், பூங்காவன மண்டபம், தீர்த்த மண்டபத்தோடு இணைந்த தீர்த்தக் கேணி ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட பூரணமான ஆலயமாக இவ்வாலயம் திகழ்கிறது.

இன்று நேரந்தவறாத ஆகமோக்தமான கிரியைகளுக்கும் சைவாசார ஒழுங்குமுறைகளுக்கும் பெயர்பெற்ற தலமாக இவ்வாலயம் விளங்குகிறது. தினந்தோறும் மூன்று காலப்பூசைகள் குறித்த நேரத்தில் இடம்பெறுகின்றன. ஆனிப் பௌர்ணமியைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்களுக்கு மஹோற்சவம் நடைபெறுகிறது. இக்காலப் பகுதியில் ஆலயத்தையொட்டிய பகுதிகளெல்லாம் தெய்வீகப் பொலிவு பெற்றிருக்கும். வீண் பொழுது போக்கிற்கும் வேடிக்கைகளுக்கும் ஆலய நிர்வாகம் இடம் தருவதில்லை. இக்காலப்பகுதியில் தமிழகத்தையும் இந்நாட்டையும் சேர்ந்த தமிழறிஞர்களும் சைவப்பெரியார்களும் நிகழ்த்தும் சைவுப்பிரசங்கங்கள் இடம் பெறுவது வழக்கம். இவ்வகையில் திருமுருக. கிருபானந்தவாரியார் கி. வா. ஜகந்நாதன், அ. ச. ஞானசம்பந்தன், சா. கணேசன் போன்றவர்களும் இந்நாட்டைச் சேர்ந்த பேரறிஞர்களுள் ஏறக்குறைய எல்லோரும் இங்கே பேருரைகள் ஆற்றியிருக்கிறார்கள். இவ்வாலயத்தை நிலைக்களனாகக் கொண்டு சைவப்பிரசங்க மரபும் அதனைக் கேட்கும் மரபும் செழித்தோங்கி வளர்ந்துள்ளன என்பது மிகையல்ல. மேலும் கந்த சஷ்டி, விநாயக விரதம், திரு வெம்பாவை போன்ற விசேட காலங்களில் விசேட பூசைகளும் உற்சவங்களும் இடம்பெறுகின்றன. குறிப்பாக விநாய விரத காலத்தில் பஞ்சமுக விநாயகப் பெருமான் வசந்த மண்டபத்தில் வீற்றிருந்து இலட்சார்ச்சனை ஏற்றருளும் காட்சி பக்தர்களைப் பரவசப்படுத்தும் மேலே கூறப்பட்ட நித்திய நைமித்திய கிரியைகளை இரு சிவாச்சாரியார்கள் ஆலய வளாகத்தின் தமக்கென ஆலய நிர்வாகம் அமைத்துத் தந்த வதிவிடங்களில் தங்கியிருந்து குறிப்பிட்ட நேரந் தவறாமலும் ஆக மோத்தமான மரபு வழுவாதும் நடத்தி வருகின்றார்கள்.

அழகுற அமைக்கப்பட்ட மஞ்சம், சப்பறம், கையிலாய வாகனம், கலையழகு மிக்க வாகனங்கள் ஆகியவற்றில் எல்லாம் ஆரோகணித் தருளித்தரிசனம் தந்தருளும் சிந்தாமணி விநாயகப் பெருமானை சித்திரத்தேர் மேல் ஆரோகணித் தருளும் பஞ்சமுக மூர்த்தமாகத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் திருவருளால் அடியார்களுக்கு ஏற்பட்டது. அன்பர் சிந்தையில் நினைந்த எல்லாவற்றையும் எளிதில் நிறைவேற்றும் சிந்தாமணி விநாயகப் பெருமான் அவ்வெண்ணத்தையும் இரண்டே ஆண்டுகளில் நிறைவேறச் செய்து இன்று வெள்ளோட்டம் நிகழவும் திருவருள் பாலித்துள்ளான்.

திருநெல்வேலியைச் சேர்ந்த விநாயர் சிற்பாலய அதிபர் கலாபூசணம் சு. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் அழகிய சித்திரத்தேர் உருவாகியுள்ளது தேர்தரித்து நிற்கும் தேர்முட்டி மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. தேரோடும் திரு வீதியும் உறுதியாகச் செப்பனிடப்பட்டுள்ளது. இப்பாரிய திருப்பணியை நிறைவேற்ற அயராது உழைத்த கலைஞர்களுக்கும், தொண்டர்களுக்கும் அடியவர்கள் எல்லோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அவர்கள் எல்லோருக்கும் தச்சை சிந்தாமணி விநாயகப் பெருமான் திருவருள் கிட்ட வேண்டும் என்று இறைஞ்சி, வெள்ளோட்ட விழாவும் இரதோற்சவம் உள்ளிட்ட மகோற்சவமும் சிறப்புற வேண்டும் என்றும் பிரார்த்திப்போமாக

ஆலய பரிபாலன சபையினர்.





## பற்றினோம் நின்பமே!

*சித்திரத்தேர் ஏறிவரும்*
*சிந்தாமணி விநாயகா!*
*பஞ்சமுகம் கொண்டவனே!*
*தஞ்சம்மென வந்தவர்க்கு*
*வஞ்சமின்றி*
*விஞ்சுவரம் அருளிடுவாய்*
*பஞ்சமில்லாப் பாலவிநாயகனே!*
*பற்றினோம் நின்பதமே!*

க. திருநீபன்
(கரவெட்டி)

## ஆலய முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

எமது குலதெய்வ மாக விளங்கும் தச்சைச் சிந்தாமணி விநாயகப் பெருமான் திருவருளால் அண்மைக்காலத்தில் பல திருப்பணிகள் நிறைவேறியிருக்கின்றன. அவ்வகையில் அழகிய சித்திரத் தேரில் தான் ஆரோக ணித்து வரும் காட்சியை அடியார்களாகிய நாம் தரிசிக்க வேண்டுமென்ற பெருங்கருணையினாலே, எமக்கு அத்தகையதோர். எண்ணத்தை எம்பெருமான் சிறிது காலத்துக்கு முன் ஏற்படுத்தியருளினான். பின்னர் அவ்வெண்ணத்தை நிறைவேற்றும் வழிவகைகளையும் காட்டி இரண்டே ஆண்டுகளில் இப்பாரிய திருப்பணியையும், சித்திரத்தேர் ஓடும் திருவீதியை ஆக்கிச் செப்பனிடும் பணியையும், தேர் நிறுத்தும் மண்டபமான தேர்முட்டி மண்டபம் அமைக்கும் பணியையும் நிறைவேற்றி அருள்செய்துள்ளான். இப்பாரிய திருப்பணியில் ஈடுபட்ட கலைஞர்களுக்கும் ஏனையோர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் நன்றிகள் கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளேன். அந்த வகையில் எமது ஆலோசனைகளையும் உள்வாங்கி நாம் எதிர்பார்த்ததை விட சித்திரத் தேரினை இருவருட காலப்பகுதிக்கு உள்ளேயே. எழிலும், பொலிவும் கொண்டதாக செய்தளித்திட்ட திருநெலிவேலியைச் சேர்ந்த கலாபூஷணம் சு. இராசரத்தினம் மற்றும விநாயகர் சிற்பாலய கலைஞர்களுக்கும் எமது நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

அதே போன்று சித்திரத்தேருக்கு என உகந்த தேர் தரிப்பிடத்தை உரிய முறையில் உரிய நேரத்தில் சிறந்த அமைப்புடன் உருவாக்கித் தந்த யாழ். ஆனைப்பந்தியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தக்காரர் திரு. சாந்தலிங்கத்துக்கும் அவர் சார்ந்த ஊழியர்களுக்கும் எமது நன்றியறிதலை தெரிவிக்கின்றோம்.

இதேபோன்று சித்திரத்தேர் பவனி வருவதற்கு சிறந்த முறையில் வீதி அமைப்பினை ஏற்படுத்தித்தந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் அவர் சார்ந்த ஊழியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

இவை மட்டுமன்றி தேவையான போதெல்லாம் தங்கள் உழவு இயந்திரங்களை தந்துதவிய எமது பிரதேசம் சார்ந்த உழவு இயந்திர உரிமையாளர் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பலத்த நெருக்கடிகளின் மத்தியிலும் தேர்த் திருப்பணிக்கென நேரத்தினை ஒதுக்கி தமது உடல் உழைப்பினை நல்கியே எமது பிரதேச இளைஞர்களுக்கும் அதேபோன்று 'சிறு துளிபெரு வெள்ளம் என்பதற்கு அமைய நிதியுதவி மற்றும் பொருள் உதவி வழங்கியவர்களுக்கும் என்னுடன் ஒத்துழைத்த ஆலய தானீசர் சபைக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர்கள் அனைவருக்கும் சிந்தாமணி விநாயகரின் திருவருள் கிட்டவேண்டுமென வேண்டுகின்றேன்.

ஆலய முகாமையாளர்
க. சிவகுருநாதன்

## ஆலய சிவாச்சாரியாரின் ஆசிச் செய்தி

கரவையம்பதியில் எழிலும் பொலிவும். புதுமையும் கொண்டமைந்த தச்சை சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் நீண்ட காலமாக பாரிய குறை ஒன்று எம்மையும் எமது பிரதேசம் சார்ந்தவர்களையும் நெருடிக் கொண்டு இருந்தது. ஆனால் அந்த நெருடலுக்கு இன்று முற்றுப் புள்ளிவைக்கப்பட்டது. ஆம் இன்று அந்த சித்திரத் தேர் அல்லாதகுறை நீக்கப்பட்டுவிட்டது. உண்மையிலே இந்த சித்திரத்தேர் திருப்பணிக்காக அரும்பாடுபட்ட கலைஞர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள். கட்டட ஒப்பந்தகாரர்கள், ஊழியர்கள் மற்றும்எமது தானீசர்சபை எமது பிரதேச மக்கள் அனைவருடையதும் சிறந்த பணியினூடாக இந்த சித்திரத்தேர் நிமிர்ந்து நிற்கின்றது. என்றால் அது மிகையாகாது. எனவே எமது ஆலயத்துக்கு மேலும் மெருகினை இச்சித்திரத்தேர் வழங்கியுள்ளது. எல்லாம் வல்ல சிந்தாமணி விநாயகப் பெருமானின் அருள் யாவருக்கும் கிட்டவேண்டும் என்றும் என்றும் அமைதியும் சமாதானமும் நிலவ அவன் அருள் புரியட்டும்.

ப. சச்சிதானந்தக்குருக்கள்
ஆலய சிவாச்சாரியார்



**மலரமைப்பு:-**
**க. திருநீபன்**

[C/4410]

### குடியரசுத் தலைவர் பதவிக்கு

## பிரபலவிஞ்ஞானி கலாமை வேட்பாளராகநிறுத்தமுடிவு

(இந்தியா)

இந்தியாவின் குடியரசுத் தலைவர் பதவிக்கான வேட்பாளராக பிரபல விஞ்ஞானி டாக்டர் ஏ.பி.கே.அப்துல் கலாமை தேசியஜனநாயகக் கூட்டணியும் அதன்தோழமைக்கட்சிகளும் ஏகமனதாக அறிவித்துள்ளன.

அண்மையில் புதுடில்லியில் கூட்டணியின் தலைவர்கள் கலந்துகொண்டகூட்டம் ஒன்றில் பிரதமமந்திரி அடல் பிஹாரிவாஜ்பாய் டாக்டர் அப்துல்கலாமின் பெயரை குடியரசுத்தலைவர் பதவிக்கான வேட்பாளராக அறிவித்தார்.

எனினும் அவரை தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளராக தெரிவுசெய்திருப்பது எதிர்க்கட்சியினருக்கிடையே குழப்பத்தை உண்டு பண்ணியுள்ளது.

வேட்பாளருக்கான இறுதி முடிவு எடுப்பதற்கு முன்னர் தற்போதைய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனின் கருத்துக்ளை அறிய வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சி கேட்டுக் கொண்டுள்ளது. (இ-5)

### பாகிஸ்தானில் நிலை கொண்டுள்ள

## அமெரிக்க படையினர் மீது தீவிரவாதிகள் ஏவுகணைத் தாக்குதல்

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் மிரான்ஸா நகரிலுள்ள கட்டடம் ஒன்றின் மீது ஏவுகணைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகபாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம், நடாத்தப்பட்ட இத் தாக்குதல் அக்கட்டடத்திலிருந்த அமெரிக்க அதிகாரிகளை குறிவைத்தே மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதே வேளை அல்கெய்டா மற்றும் தலிபான் இயக்கங்களை தேடி அழிக்கும் நடவடிக்கைகளில் இந்த அமெரிக்க அதிகாரிகள் ஈடுபட்டு வந்தனர். எனினும்இத்தாக்குதலால் எவருக்கும் ஆபத்து இல்லை யென்றும் இதற்கு எவரும் உரிமை கோரவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தினால் பாகிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்க துருப்பினர் மத்தியில் பலத்த அச்சம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

## அல்கெய்டா ஆதரவாளர் அமெரிக்காவில் கைது

(வாஷிங்டன்)

அல்கெய்டா அமைப்புக்காக செயற்படும் ஒருவரை கைது செய்துள்ளதாக அமெரிக்க அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஜோன் அஸ்குறட் தெரிவித்துள்ளார்.

அப்துல்லா அல் முஜாதீர் என்ற பெயரையுடைய இவர் ஒரு அமெரிக்கப் பிரஜை எனவும் அல்கெய்டா வலை அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை இவர்கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி நபர், அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் வைத்து அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் ஜோன் அஸ்குறட் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# உலக தரிசனம்

## சீனாவில் பாரிய வெள்ளப்பெருக்கு 179 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(சியான்)

சீனாவின் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 179 பேர் இறந்துள்ளனர்.

மேற்படி வெள்ளப் பெருக்கில் மூழ்கி இறந்தவர்களில் இதுவரை 150 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் 100 இற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என்றும் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் வசிப்பிடங்களை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வெள்ளப் பெருக்கால் பல லட்சம் ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர்ச்செய்கை காணிகள் பாதிக்கப்பட்டதுடன் ரயில் பாதைகள், வீதிகள் உட்பட பாலங்கள் என்பனவும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போன ஏனையோரைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (த.9)

## பாதுகாப்பு அமைச்சர் பாக்., இந்தியா விஜயம்

(வாஷிங்டன்)

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டொனால்றம்ஸ்பீல்ட் நேற்று முன்தினம் புதுடில்லி சென்றுள்ளார்.

இந்தியா சென்ற அமைச்சர் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியத் தலைவர்கள் பலரை சந்தித்துநேற்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக மேலும் பேச்சுக்களை நடத்துவதற்கு அவர் நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளார் என சர்வதேச செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், பதற்றநிலைகள் இவ்விரு நாடுகளுக்கும் இடையேயும் தவிர்க்கப்பட்டிருந்தாலும் ஆயுத மோதல் என்ற அபாயம் இன்னும் அகன்று விடவில்லை என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார். (8)

### அபிவிருத்திதிட்டம் முன்னெடுக்கப்படும்

(புதுடில்லி)

இலங்கை-இந்தியப் பொருளாதாரத்தை ஒருங்கிணைத்து அபிவிருத்தி செய்யக் கூடிய திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்று இந்தியவர்த்தகதைத்தொழில் அமைச்சர் முரசொலிமாறன் தெரிவித்துள்ளார்.

இதனைக்கருத்தில்கொண்டு இரு நாடுகளும் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் இவ்வாறான திட்டங்களைதயாரித்து இரு நாட்டு நிபுணர்களும் தொடர்ந்து பேச்சுக்கள் நடாத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

### இந்தியப்போஷகர் குழு

## யாழ். வரும்

(நெல்லியடி)

இந்தியாவின் கேரளமாநில போட்டா இறைதியான இல்லப்போதகரான அகஸ்தீன் மொண்டகாட் அடிகளாரும் அவரது குழுவினரும் மீண்டும் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளனர். அடிகளாரோடு அருட்திரு யோசப், அருட்சகோதரன் ஜோர்ஜ் ஆகியோரும் வரவுள்ளனர். இவர்கள் யூன் மாதம் 18 ஆம் திகதியில் இருந்து யூன் 23 ஆம் திகதி வரை கிளி-முல்லைத்தீவு மாவட்டத்தில் வழிபாடுகள் நடத்தி முடிந்த பின்னர் யூன் 24 ஆம் திகதி தொடக்கம் யூன் 26 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் வழிபாடுகளை நடத்தவுள்ளனர். யாழ்ப்பாணத்தில் தும்பளை லூர்து அன்னை தேவாலயம், ஆயர் இல்லம், சம்பத்திரிசியார் கல்லூரி மைதானம் ஆகிய இடங்களில் வழிபாடுகளை நடத்துவர்.

இவர்கள் யாழ்ப்பாணத்திற்கு கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் விஜயம் செய்து வழிபாடுகளை நடத்தி இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ந-247)

### சங்கிலி அறுத்தவர்

## அகப்பட்டார்

(நெல்லியடி)

இளம்பெண்ஒருவரின்தங்கச் சங்கிலி அறுத்தவர் பொது மக்களால் விரட்டிப் பிடிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன் தினம் மாலை 5.30 மணியளவில் நெல்லியடிச் சந்தியில் இடம்பெற்றது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

ஒருவாரத்திற்கு முன் நெல்லியடிச் சந்திக் கடை ஒன்றில் வேலை செய்யும் இளம் பெண் ஒருவர் ஒரு ஒழுங்கையால் தனியே சென்றுகொண்டிருந்த போது நபர் ஒருவர் அவரது தங்கச்சங்கிலியை அறுத்து எடுத்தார்.

நேற்று முன்தினம் மாலை அந்தப் பெண் குறித்த நபரை அடையாளம் கண்டு அருகில் இருந்தவர்களுக்கு தெரிவிக்க அவர்கள் குறித்த நபரை துரத்திச் சென்று பிடித்து நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ந-247)

## யுத்தக் கப்பல்களை இந்தியாதிருப்பிஅழைத்தது

(இந்தியா)

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பிரச்சினையால் ஏற்பட்ட பதற்றத்தை நீக்கும் வகையில் இந்தியா வடக்கு அரபிக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போர்க்கப்பல்கள் அனைத்தையும் திருப்பி அழைத்துள்ளது.

ஏவுகணைகள் தாங்கிய 3 கப்பல்கள் உட்பட 8 கப்பல்கள் அரபிக் கடலில் இருந்து திரும்ப அழைக்கப்பட்டுள்ளதாக இந்தியக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றத்தை தணிக்கும் வகையில் தெற்காசியப் பிராந்தியத்திற்கு அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இந்தியா கப்பல்களை மீள அழைத்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## ஐரோ.நாடுகள் மீதும் அணுஆயுததாக்குதல்அச்சம்

(பரிஸ்)

ஐரோப்பிய நாடுகள் மீது அணு ஆயுத, மற்றும்உயிரியல் ஆயுததாக்குதல் இடம்பெறும் அபாயம்நிலவுவதாகபிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் மிசல் எலியோட்மரீ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலகநாடுகள் தீவிரவாதத் தாக்குதல்பற்றி அச்சம் தெரிவித்திருக்கும் இவ் வேளையில் பிரான்ஸ் போன்ற நாடுகள் இவ்வாறான தாக்குதலுக்கு உள்ளாகும் நிலை அதிகம் என்றும் அவர்மேலும் எச்சரித்துள்ளார். (த-9)

## சிவாவின் இடத்திற்கு குமரகுருபரனை நியமிக்குக

### தமிழ்ச் செல்வனுக்குக் கடிதம்

(வவுனியா)

தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் மு. சிவசிதத்தின் மறைவையொட்டி பாராளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கலாநிதி த. குமரகுருபரனை நியமிக்குமாறு விடுதலைப் புலிகளின அரசியல்துறைப் பொறுப்பாளர். சு. ப. தமிழ்ச்செல்வனிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் வவுனியா மாவட்ட கிளைத் தலைவர் கே.செந்தில்நாதன் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கலாநிதி குமரகுருபரனை அவ்வெற்றிடத்துக்கு நியமிக்குமாறு தமிழ்ச்செல்வனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தமிழர்விடுதலைக்கூட்டணியினரால் சமர்ப்பிக்கப்பட்ட தேசிய பட்டியலுக்கு அடுத்த படியாக கலாநிதித. குமரகுருபரனின் பெயர் இடம்பெற்றிருப்பதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (வ)

### பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பப்பட்ட

## காணாமற் போனோர் பட்டியலை பூரணமாக ஏற்றுக்கொள்ளமுடியாது

### மனித உரிமை ஆணைக்குழுத்தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலிருந்து 1996, 1997 ஆம் ஆண்டு காணாமற்போனோரில் 167 பேர் நாட்டில் ஏற்பட்ட வன்செயலில் கொல்லப்பட்டுள்ளார்கள் என சங்கத்திற்கு பாதுகாப்பு அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட பெயர் பட்டியலில் பல மாற்றங்கள் உள்ளதால் அதனை பூரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது எனயாழ்.வந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகளை யாழ். அலுவலகத்தில் சந்தித்த போது தெரிவித்துள்ளனர்.

மேலும் வன்செயல்களினால் கொல்லப்பட்டவர்கள் என பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் உள்ள பெயர்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும்இதுஉண்மையாகவும் உறுதியாகவும் தயாரிக்கப்பட்ட பட்டியலாக இருக்க மாட்டாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்வாறு கொல்லப்பட்டவர்கள்என பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்களின் மரண அத்தாட்சிப் பத்திரத்தினைபெற்றுக்கொள்ளுங்கள் எனவும் அவர்கள் உயிருடன் இருப்பின் இதனை மாற்றிக்கொள்ள முடியும் எனவும் பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த-101)

இறப்பே புரிந்த தொழிற் றாம் சிறப்புந்தான்
சீரல்லவர்கட் படின்

குறள்

# வலம்புரி

## குழம்பிய குட்டை

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் எனப் பண்டிதமணி எப்பவோ கூறியது காதில் ஒலிக்கிறது.

கந்தபுராண கலாசாரம் என்றால் என்ன என்பது ஆய்வுக்குரியது. ஆனால் யாழ்ப்பாணத்தின் இன்றைய கல்விப் பாரம்பரியத்திற்கு அத்திபாரமாக இருந்தது கந்தபுராண படனமே.

அன்று ஆறுமுகநாவலரால் விதைக்கப்பட்ட கந்தபுராணமே யாழ்ப்பாணத்தார் படித்தவர்கள்- பாடறிந்து ஒழுகும் பண்புடையவர்கள் என்ற உயர்ந்த நன் மதிப்புக்குக் காரணமாயிற்று

எனினும் அத்தகைய உயரிய கந்த புராணக் கலாசாரம் இன்று மாறி காடைத்தனக் கலாசாரம் அரங்கேறுகிறது.

மதுப்பாவனை, குறாப் சண்டைகள், பெண்கள் மீது சேட்டைகள் எனப் பல்வேறு அடாவடித்தனங்கள் அரங்கேறுகின்றன.

1995 இற்கு முன் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்தகாலத்தில் கலாசார விழுமியங்கள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் 1995 இன் இறுதிப் பகுதிக்குப் பின்னர் குடாநாட்டு இளைஞர்களின் கட்டுக்கோப்பு- ஒழுக்கம் என்பன குலைவுற்று சின்னா பின்னமாகியது.

யுத்த சூழ்நிலையும், படையினரின் கட்டுப்பாடும் பிள்ளைகளைக் கண்டித்து வளர்ப்பதில் பெற்றோர்கள் கொண்ட அச்சமும், உளவியல் கருத்தின் அடிப்படையில் அடித்துப் படிப்பிக்காத ஆசிரியர் சமூகமும் இளைஞர்களின் ஒழுக்கத்தைக் குலைப்பதில் முக்கிய பங்காற்றின.

இப்போது இளைஞர்கள் குழுக்களாகச்சேர்ந்து திரைப்படங்களில் வருகின்ற பெயர்களை சூடிக்கொண்டு தீயவழியை நாடுகின்றனர்.

இளைஞர் சமூகம் என்பது ஓர் இனத்தின் விதைப்புகள், விதைப்புகள் பழுதடைந்தால் விளைச்சல்கள் சப்பட்டைகளாகவே இருக்கும். எனவே இளைஞர்கள் சரியான பாதையில் செல்ல வேண்டும் அதற்கு பெற்றோர்கள் நல்ல வழிகாட்டுநர்களாக இருக்க வேண்டும். குழம்பிய குட்டையாக இருக்கும் யாழ்ப்பாணத்தில் மிகவிரைவில் ஒழுக்கம் நிலை நாட்டப்பட வேண்டும்.

# மானிட வாழ்வின் அகநோக்கினை

# ஆராய்ந்தவர் பொ. கைலாசபதி

09.6.2002ஞாயிற்றுக்கிழமை, யாழ்ப்பாணம் குமாரசுவாமி வீதியிலுள்ள வேதாந்தமடத்தில் 'சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி ஆளுமையும் ஆக்கமும்' என்னும் நூல் வெளியீடும் நூற்றாண்டு விழாவும் இடம் பெற்றன. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களின்கருத்துக்கள் இங்கு கட்டுரையாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

(ஆ-ர்)

தொகுப்பு.

## பண்டிதர் செ. திருநாவுக்கரசு

சிந்தனைச்செல்வர் பொ. கைலாசபதி அவர்கள் ஒரு பி. எஸ். சி. பட்டதாரி. 1902 ஆம் ஆண்டு அளவெட்டியில் பிறந்தவர். 1961 இல் இறைவனடி இணைந்தவர். தனது இருபத்தெட்டாவதுவயதில் 1930 ஆம் ஆண்டில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் உப அதிபராகப் பணிபுரியத் தொடங்கி, 1958இல் தான் ஓய்வுபெறும் வரைக்கும் உப அதிபராகவே கலாசாலையின் வாழ்வோடு தன்னைப்பிணைத்துக்கொண்டவர். சைவாசிரிய கலாசாலையின் அதிபராயிருந்த மயிலிட்டி பி. சுவாமிநாதன், தமிழ் விரிவுரையாளராக இருந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோருடன் இவரையும் சேர்த்துக் கலாசாலை 'மும்மூர்த்திகள்' எனச் சிறப்பித்துப் பேசப்படுவது வழக்கம். பண்டிதமணியவர்களின் ஆன்மீக வழி காட்டியாக விளங்கியவர் கைலாசபதியவர்களே. அதிகம் பேசாத, ஆத்மீக சிந்தனையாளராகவும் ஏதுக்களைத் தருக்க நியாயமாகக் கொண்டு, மானுடவாழ்வின் அகநோக்கினை ஆராய்பவராகவும் காணப்பட்ட கைலாசபதி ஐயாவின் சிந்தனைகளை அவ்வப்போது கொப்பிகளில் குறித்துவைக்கும் பணியில் பண்டிதமணி அவர்கள் ஈடுபட்டிருந்தார். திருநெல்வேலி ஈரப்பலா வளவில் இத்தகைய ஆன்மீக உரையாடல்கள் பல அரங்கேறியுள்ளன. முப்பத்து இரண்டு கொப்பிகளில்மாத்திரம் அடங்குகின்ற ஆன்மீகதத்துவக் கருத்துக்களே இன்று எமக்குக் கிடைக்கும் பொ. கைலாசபதியின் சிந்தனைகளாகும். கவிஞர் தங்கமாமயிலோன் இக்கொப்பிகளிலிருந்து அரிய கருத்துக்களை நகலெடுத்த புண்ணியத்துக்குரியவர்.

கைலாசபதி அவர்களின் சிந்தனைகள் தனிமனித உந்துதலினால் ஏற்பட்ட அகத்தேடல்கள். அவை நூல்களாக வெளிவரவேண்டுமென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. ஒருமுறை திருநெல்வேலிக்கு வருகை தந்த பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனம் அவர்கள், பண்டிதமணி ஐயாவிடம் உரையாடுகையில் கைலாசபதியவர்களின் சிந்தனைகளை நூலாக்குவதுபற்றிக் குறிப்பிட்டார். அதற்குபண்டிதமணியவர்கள் 'எனக்கே தெளிவில்லாதவை பல இருக்கின்றன. இந்நிலையில் இவற்றை எப்படி வெளிக்கொணர முடியும்' எனப்பதிலிறுத்தார். ஆனால் ஏழாலைப்பண்டிதர் மு.கந்தையா அவர்கள், தாம் எழுதிய நூலில் கைலாசபதியவர்கள் சைவத்திருமுறைகளினின்றும் சைவசித்தாந்தத்தினின்றும் பிறழ்கின்றாரோ என ஐயுறவேண்டியுள்ளது எனக் கூறியுள்ளார். இதை ஒருவேளை அமரர் கைலாசபதியவர்கள்காணநேர்ந் திருந்தால்ஒட்டைச் சிரட்டைக்குள் உயிரை விட்டிருப்பார். பிறர் வியாக்கியானம் செய்வதற்கானவை அல்ல அவரதுசிந்தனைகள்.

பாலர் வகுப்புகளுக்கான பயிற்சிப்பாடங்கள், கணிதம், கிருஷிக சாத்திரம், குடியியல் போன்ற பாடங்களைக் கற்பித்தவர் கைலாசபதியவர்கள். ஒருமுறை கணிதபாடத்தில் இரண்டால் பிரிப்பது பற்றிய சமன்பாடொன்றைக் கற்பிக்கையில் அவர்கூறியநகைச்சுவையான கதையொன்றுபின் வருமாறு அமைந்துள்ளது

அது ஒரு தும்மட்டிக்காய்ச் சாத்திரியின் கதை தன்னைச் சாத்திரி என்று கூறிய ஒருவன் அவ்வூரில் ஒரு பெண்ணை மணஞ் செய்து கொண்டான். அவளோ, தனக்கும்ஒரு நாளைக்குச் சாத்திரம் சொல்லுமாறு அவனை வற்புறுத்தினாள். அதற்கு அவன் காலம், நேரம்சரிவரும்போது சாத்திரம் சொல்லுவதாகக் கூறிச் சென்று விட்டான். மறுநாள் அவனதுமனைவி தோசை சுடும்போது அவளுக்குத் தெரியாமல் குசினிக்குப் பின்னால் ஒளித்திருந்து, அவள் அடுப்பில் தோசைக் கல்லின் மீதுமாவை ஊற்றும் போதும் தோசையைப் புரட்டும் போதும் எழுகின்ற 'சுரீர்' என்னும் ஓசைக்குத்தக்கதாக, ஏற்கனவே தான்பொறுக்கிவைத்தகூழாங்கற்களை இவ்விரண்டாக அடுக்கிக்கொண்டே வந்தான். இவ்வாறு பதினொரு தோசைகளுக்காக இருபத்தியிரண்டு கற்களை அடுக்கித் தோசைக் கணக்கைப் பார்த்துக் கொண்டான். பின்னர், தனது மனைவியிடம் வந்து, இன்று நாளும் நட்சத்திரமும் நல்லாயிருக்கிறது; உனக்குச் சாத்திரஞ் சொல்லுகிறேன். நீ இன்று தோசை சுட்டாயல்லவா? அதுவும் பதினொரு தோசைகள் என்றான். அவனது மனைவியோ வியந்து பாராட்டி, அச்செய்தியை ஊர் முழுதும் பரப்பித் தன் கணவன் புகழை நிலைநாட்ட முயன்றாள்.

இதனைக் கேள்வியுற்ற அந்நாட்டரசன், அச்சாத்திரியை அழைத்து, தன் மனைவியின் நகைகளை யாரோ திருடிவிட்டார்களென்றும், அவற்றைக் கண்டுபிடித்துவிட வேண்டுமென்று, ஒரு கிழமைக்குள் நகைகள் கிடைக்காவிட்டால், சாத்திரியின் கண்ணும், மூக்கும் அரியப்படும் என்றும் கூறிவிட்டான்.

மிக மனவருத்தத்துடன் வீதி, வீதியாக அலைந்த சாத்திரி, ஒரு கிழமை தவணை முடியும் போது தன் கெட்ட காலத்தை நினைத்து 'கண்ணாரே, மூக்காரே காணாமற் போறீரே' எனக் கத்திக் கொண்டு சென்றான். என்ன ஆச்சரியம்! இரு பெண்கள் அவன் முன்னால் ஓடி வந்து, தங்களை மன்னிக்கும்படியும், தாங்களே நகைகளைத் திருடியவர்கள் என்றும், தங்களது பெயர்கள் கண்ணி, மூக்கி என்றும் கூறி நின்றனர். மறுநாள் மன்னனிடம் நகைகளை ஒப்படைத்த சாத்திரி, திருட்டுப் பெண்களுக்கும் மன்னனிடமிருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொடுத்தான்.

இக்கதை போன்ற பல நகைச்சுவைக் கதைகளை வகுப்பறையில் கூறி இனிமையாகக் கற்பிப்பவர் எங்கள் பேராசான் கைலாசபதி அவர்கள். 1951 இல் அதிபராயிருந்த சுவாமிநாதன் அவர்கள் இளைப்பாறும் போது, இவரே அடுத்த அதிபரென மாணவர்கள் நம்பினர்.

அதிபரின் பிரியாவிடை வைபவத்தின் போது,

'உப அதிபர் சின்னவிரல் ஒன்றையசைத்தால் அபி நயங்கள் யாவும் அடங்கும்'

எனத் தொடங்கும் வெண்பாவையும் பாடி மகிழ்ந்தனர். ஆனால் இளைப்பாறிய அதிபரது படத்துடன் அருகில் வைக்கப்பட்டிருந்த கைலாசபதியவர்களின் புகைப்படம் மறுநாள் மாயமாக மறைந்து விட்டது. எனினும் கைலாசபதி, பண்டிதமணி ஆகியோரின் புகைப்படங்கள் திருநெல்வேலி சைவகலாலய சங்கத்தாரின் முயற்சியினால் கலாலய மண்டபத்தில் வைக்கப்பட்டன. அவை இன்றும் காணப்படுகின்றன.

கைலாசபதி ஐயாவை முதன் முதலில் 'மௌனமுனி' எனக் குறிப்பிட்டவர், வேலணையைச் சேர்ந்த பண்டிதை. த. வேதவல்லி அவர்கள். 'அவர் ஒரு முனி; மாமுனி; மௌனத்தவமுனி; தான்கண்ட தெய்வத்துடன் இணைந்து கொள்ளுகின்ற தன்மை கொண்டவர்' என வேதவல்லி அம்மா கூறியுள்ளார். திரு. சுவாமிநாதன் அவர்களுக்குப் பிறகு சைவாசிரிய கலாசாலையின் அதிபராயிருந்த டாக்டர் சிவப்பிரகாசம் அவர்களோ, 'கைலாசபதி அவர்கள் தனது சிந்தனைகளினூடாக இறைவனுடன் அகவயமான தொடர்பு பூண்டவர்' என்கிறார்.

கைலாசபதி ஐயா அவர்கள் இரவு வேளைகளிலும் எழுந்து உலாவப் புறப்பட்டுவிடுவார். கோண்டாவில், திருநெல்வேலிச் சுடலைகளில் தங்கியிருந்து அகாலவேளைகளில் அவர் சிந்திப்பதுண்டு. பண்டிதமணியவர்களும் கூட அதிகாலை 4 மணிக்கு எழுந்து நடைபழகுவது வழக்கம். மாறாக, கலாசாலை மாணவர்களும் இரவில் எழுந்து களவாக வெளிச் சென்று இரவுச்சாப்பாட்டுக் கடைகளில் சாப்பிடச் செல்வதுண்டு. அப்போது ஒருநாள், நடுநிசியில் வந்த ஓர் உருவத்தைப் பார்த்துப் பேயென மருண்டு, ஒரு போர்வையினால் மூடிப்பிடித்துத் துணிச்சலுடன் நிலத்தில் குத்திய மாணவனை, 'காணும் கனகரத்தினம் இனி விடும்' என்ற உப அதிபரின் குரல் திடுக்கிட வைத்ததும் பழைய சம்பவமாகும். ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்திருக்கும் உப அதிபருக்குக் குறிப்பிட்ட உணவுவகைகளே ஏற்புடையதாயிருந்தன. ஒவ்வொரு நாளும் தோடம்பழச் சாற்றைக்குடிக்கக் கொடுத்த என்னிடம் ஒரு மாதமுடிவில் மூன்று ரூபா 61 சதத்தை முறைப்படி தந்ததுடன், மாதாமாதம்சரியானதொகையைத் தந்ததும் அவரது புனிதக் கரங்கள் தான்.

அந்தக் காலத்தில் சைவாபிவிருத்திச் சங்கத்து ஆசிரியர்

(2-ம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்



ஓர் எல்லையில் இருந்து இன்னொரு எல்லைக்கு ஒருவர் மாற்றப்படும் பொழுது அவரை அழைத்துச் செல்ல இரு காவலர்கள் இருப்பார்கள். 'புண்ணியம்' 'பாபம்' ஆகிய இரு காவலர்களே மனிதனை ஒரு பிறப்பில் இருந்து இன்னொரு பிறவிக்கு வழி நடத்திச் செல்லும் காவலர்கள் ஆகும். அவர்களுடைய கவனத்தில் இருந்து தப்பிஓர் எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்குப் போவதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் செயற்பட வேண்டும் ஆனால் செயலின் விளைவையிட்டுக் கணக்கிடாதீர்கள்.

செயலைப் புரிவதற்குத் தூண்டுதல் அளித்து அதைச் சாத்தியம் ஆக்கிய இறைவனிடம் அதைவிட்டு விடுங்கள். செயல் மனத்திடன், விருப்பம் ஆகிய எல்லாவற்றையும் அவருக்கே அர்ப்பணித்து விடுங்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஆதரவில்

**மூன்றாவது மனிதன்**

**புத்தகக் காட்சியும் விற்பனையும்**

கலை, இலக்கியம், விமர்சனம், மொழியாக்கம், சமூகவியல்,
அறிவியல், கணனியியல், மருத்துவம்,
மற்றும் துறைசார் நூல்களும் சிறு சஞ்சிகைகளும்

2002.யூன் 14,15,16 களில் 10 மணி முதல் 5 மணிவரை
யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில்

அல்பா மிக்ஷர்
பலாலி வீதி, யாழ்ப்பாணம்



# தேவை

## கண்ணாடித் தொழிற்சாலைக்கு

1. ஊதுபவர்
2. குமிழி போடுபவர்
3. உதவியாளர்

ஆகியோர் தேவை

அனுபவம் உள்ளவர்கள் நாளை (14.06.2002) வெள்ளிக்கிழமை நேரில் வரவும்

*The Peninsula Group*
*127/10 Temple Rd*
*Jaffna*

த (THE) பெனின்சுலா குறூப்
127/10 கோயில் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்

(C/4413)


## பனை அபிவிருத்திச் சபை

**பனை தறித்தலுக்குஎதிரான கண்டனப் பேரணி**

**ஒத்திவைப்பு**

நாளைய தினம் (14.06.2002) வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த பனை தறித்தலுக்கு எதிரான கண்டனப் பேரணி ஹர்த்தால் , மீனவர் மறியல் போராட்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பிற்போடப்பட்டுள்ளது.

நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஏற்பாட்டுக்குழு
கண்டனப் பேரணி

(C/4412)

உ
சிவமயம்

## சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

### சைவ சமய பாடக் கருத்தரங்கு நிலைய இடமாற்றம்

**வலிகாமம் கல்வி வலயம்**

நாளை (14.06.2002) வெள்ளிக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருந்த சைவ சமய பாடக் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை சம்பந்தப்பட்ட அனைத்து சைவசமய பாட ஆசிரியர்களுக்கும் ஏனைய வள அணியினருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சைவபரிபாலனசபை யாழ்ப்பாணம் (C/4414) சைவப்புலவர் வ.கந்தசாமி பரீட்சைச் செயலாளர்

## இங்கிலாந்து அணி தகுதிபெற்றது

(சியோல்)

தற்போது நடைபெற்றுவரும் உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் சுவீடனை எதிர்த்து விளையாடிய ஆர்ஜென்ரீனா அணி 1:1 என்ற நிலையில் கோல்களைப் பெற்றது. எனினும் ஏனைய போட்டிகளில் விளையாடும் தகுதியை இழந்துள்ளது.

நைஜீரியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் நடந்த போட்டியில் இரண்டு அணியும் கோல் எதுவும் போடாத நிலையில் இங்கிலாந்து அணி சுற்றுப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

(ந-5)

### கலை விஞ்ஞான...

எஸ். இராசதுரை மேற்கொண்டுள்ளதாகவும் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின் சம்பந்தப்பட்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் தெரவிக்கப்படுகிறது. (வ)

### சமூக சீரழிவில்...

இளைஞர் ஒருவர் எமது பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து இளைஞர் கோஷ்டி பற்றிய சகல விபரங்களும் திரட்டப்பட்டுள்ளன. ஏனைய இளைஞர் கோஷ்டிகள் பற்றிய விபரங்களும் எம்மால் திரட்டப்பட்டு வருகின்றன.

இதேவேளை பொதுமக்களால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞர் குடாநாட்டின் பிரபல பாடசாலை ஒன்றின் பழைய மாணவராவார்.

இவர் தாம் இனிமேல் இவ்வாறான செயற்பாடுகளில் ஒருபோதும் ஈடுபடப்போவதில்லை என உறுதியளித்ததைத் தொடர்ந்தும், இவருடைய பெற்றோர் தமது மகன் இனிமேல் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார் எனவும், அதற்குத் தாம் பொறுப்பாளியாக இருப்பதாகவும் உறுதி மொழி வழங்கியதை அடுத்து குறித்த இளைஞன் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க இளைஞர் கோஷ்டியினர் சமூக சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதெனவும் இவ்வாறான செயற்பாடு களில் ஈடுபடுபவர்களுக்கு பொது மக்களின் வேண்டுகோளின் பேரில் பகிரங்கத் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கீகப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (த)







## மங்களகரமான ஆரம்ப விழா

யாழ். மண்ணில் உயர் தொழில்சார் முகாமைத்துவ, கணக்கியல் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படுவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**CAREER . COM INSTITUTE**

தொழில்சார் வல்லுனர்களின் உருவாக்கத்திற்காக எமது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் கற்கைநெறிகள்

- CMA
- CHARTERED
- AAT
- IAB

எமது நிறுவனமானது யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மதிப்பிற்குரிய பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கனிளால் திறந்து வைக்கப்படும்.

காலம் :- இன்று 13.06.2002 பி.ப 4 மணி
இடம் :- இல . 79 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சென். ஜேம்ஸ் தேவாலயம் முன்பாக)

(5432)


# மரண அறிவித்தல்

## அப்பாக்குட்டி குமாரசிங்கம்

(ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் யாழ் கச்சேரி)

நாவற்குழி மேற்கு சித்தி விநாயகர் வீதியைப்பிறப்பிடமாகவும் **Holland**ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி குமாரசிங்கம் அவர்கள் (10.06.2002) திங்கட்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி செல்லம்மா தம்பதிகளின் அன்புமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அப்புத்துரை கனகம்மாவின் மருமகனும்

பத்மநாதன்(பிரான்ஸ்), சிவபாதம்(நாவற்குழி), சிவனேஸ்(சுவிஸ்), பேர்ண் (மீசாலை), பத்மினி(வவுனியா), தயாபரன்(மலேசியா), கிருபாகரன்(கொலண்ட்), ரஜனி(திருநெல்வேலி), கிரிதரன்(கொலண்ட்), சயந்தினி(கொலண்ட்), ஜெசிந்தினி(ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தினி(பிரான்ஸ்), மனோரஞ்சிதம், இந்திராதேவி(சுவிஸ்), குகநாதன்(வவுனியா), ஜெயமலர்(மலேசியா), நிர்மலா(கொலண்ட்), லோகேஸ்வரன்(கல்யாணி பான்சி சாவகச்சேரி, யதூஷ் வீடியோ திருநெல்வேலி), அனித்தா(கொலண்ட்), ரவி(கொலண்ட்) சுரேஸ்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பபிதா, லாவண்யா, தவராஜினி, சுதாயினி, ரேகா, லக்ஷன், வளர்மதி, ரிஜி, நிவேதன், யதூஷன், ஆரபி, நிருஷன், தர்சினி, அஜித், அனித், லக்ஸ்மன், ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் செல்வரத்தினம் காலஞ சென்ற கோபாலசிங்கம் மற்றும் மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரனும் மாருஜா, கஜிதா ஆகியோரின் பூட்டனும் சோமசுந்தரம், உரித்திரராசா, மனோகரன், மங்கையற்கரசி ஆகியோரின் மைத்துனரும் ஜீவபாலன், அம்பிகைபாகன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.06.2002 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் திருநெல்வேலியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யதூஷ் வீடியோ அன் போட்டோ
15/12 மாரி அம்மன் வீதி
திருநெல்வேலி தெற்கு

தகவல்
R.லோகேஸ்வரன் (ஈசன்)
மருமகன்

(5433)

சைவபரிபாலனசபை சைவப்புலவர் வ.கந்தசாமி
யாழ்ப்பாணம் (C/4414) பரீட்சைச் செயலாளர்

சோப்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

யதுர்ஷ் வீடியோ அன் போட்டோ
15/12 மாரி அம்மன் வீதி
திருநெல்வேலி தெற்கு

R.லோகேஸ்வரன் (ஈசன்)
மருமகன் (5433)


# புதுக்கடைத் திறப்பு விழா

அன்புடையீர்



நிகழும் ஆனி மாதம் இன்று (13.06.2002) வியாழக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரையில் உள்ள சுப வேளையில் உலகில் தனித்துவமானதும் முதற் தரமானதுமான நவீன டிசைன்களில் தரம் குன்றா தங்க நகைகளை வடிவமைக்கும்



## சாரங்கா நகை மாடத்தின் புதிய இணை நிறுவனம்

# சாரங்கா நகை மாடம்

இல 157/1, கஸ்தூரியார் வீதியில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

இணையகம்
சாரங்கா நகை மாடம்
இல . 177/04 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
T . P . FAX . 021- 2480

**தலைமையகம்**
**அருள் முருகன் நகையகம்**
**96/1, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**

சாரங்கா நகை மாடம்
இல . 157/1 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
கிளையகம்:
சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(C/4415)



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.